வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 12.02.2024 திங்கட்கிழமை | இதழ் : 43 | பக்கங்கள் : 12





மாருதி

Money Exchange (Pvt) Ltd.

இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06

T.P: 011 236 2086

இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 221 4433

076 284 4443

MoneyGram money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்

Ria MONEY TRANSFER — ரியா பணப்பரிமாற்றம்

WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.


# வெடுக்குநாறிமலை ஆலயத்தில் பிக்குகள், படைகள் பிரசன்னம்!

## புனித இடத்திலும் காலணிகளை கழற்றாமல் நடமாட்டம்!





வவுனியா, பெப்ரவரி 12

**வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் கோயிலுக்கு பிக்குகளும் படையினரும் அடங்கிய குழு ஒன்று நேற்று சென்றது. அணிந்திருந்த காலணிகளை கழற்றாமல் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த பகுதிகளில் அவர்கள் நடமாடித் திரிந்துள்ளனர்.**

கொழும்பிலுள்ள தேசிய மரபுரிமைகளை பாதுகாப்பதற்கான அமைப்பின் தலைவர் மெதகொடை அபய திஸ்ஸ தேரர், முல்லைத்தீவு குருந்தூர் மலை விகாராதிபதி கல்கமுவ சாந்தபோதி தேரர் உள்ளிட்டவர்களே படையினருடன் வெடுக்குநாறி மலைக்கு சென்றனர்.

இந்தக் குழுவினர் இராணுவத்தினரின் உழவு இயந்திரத்தில் அங்கு சென்றிருந்தனர். இவர்கள், வெடுக்குநாறி மலையை மீளவும் ஆக்கிரமிக்கும் நோக்கிலேயே அங்கு வந்துள்ளனர் என்று அப்பகுதி மக்கள் ஐயம் வெளியிட்டுள்ளனர்.

வெடுக்குநாறி மலையை - ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தை ஆக்கிரமிக்க கடந்த 2015ஆம் ஆண்டு முதல் தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கு எதிராக வவுனியா மேல் நீதி மன்றில் வழக்கு ஒன்றும் நடைபெற்று வருகின்றது.

இதனிடையே, கடந்த ஆண்டு மார்ச் மாதம்

11

## அமைச்சு செயலாளரின் ஊதியம் ரூ. 16 இலட்சம்!

கொழும்பு, பெப். 12

முக்கிய அமைச்சின் செயலாளர் ஒருவர் 16 இலட்சத்து 87 ஆயிரம் ரூபாய் மாதாந்த ஊதியத்தை பெற்று ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளார்.

இரண்டாம் நிலை அடிப்படையில் தொடர்புபட்ட அமைச்சில் பணியாற்றும் இந்த செயலாளர் 9 இலட்சத்து 74 ஆயிரம் ரூபாயை ஊதியமாகப் பெற்றிருந்தார். இந்த நிலையில், அவருக்கு, கடந்த ஜனவரி மாதம் 7 இலட்சத்து 12 ஆயிரம் ரூபாய் சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டது. இதன் மூலமாக அவர் 16 இலட்சத்து 87 ஆயிரம் ரூபாயை கடந்த மாதம் சம்பளமாகப் பெற்றுள்ளார்.

இந்த விடயம் பலருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

## வீதியில் காயவிட்ட நெல்லுக்கு காவலிருந்தவர் விபத்தில் பலி!

### வடமராட்சியில் நேற்று அதிகாலை சோகம்!

வடமராட்சி, பெப். 12

வீதியில் நெல்லை காய விட்ட பின்னர், அதன் பாதுகாப்புக்காக வீதிக் கரையில் படுத்திருந்தவர் மோட்டார் சைக்கிள் மோதியதில் உயிரிழந்தார்.

புலோலி - கொடிகாமம் - கச்சாய் பிரதான வீதியில் துன்னாலை மாய்கரான் பகுதியில் இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 5 மணியளவில் இடம்பெற்றது. இதில், புலோலி தெற்கை சேர்ந்த பரராஜசிங்கம் நாகேஸ்வரன் (வயது 57) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தார்.

11

## ஐ. நா. மனித உரிமை பேரவை கூட்டத்தொடர் 26இல் ஆரம்பம்!

### இலங்கை விவகாரம் மார்ச் 4இல்

ஜெனிவா,பெப். 12

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 55ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் 26 ஆம் திகதி ஆரம்பமாகி ஏப்ரல் 5ஆம் திகதி வரை ஜெனிவாவில் நடைபெறவுள்ளது.

இந்த கூட்டத்தொடரில் இலங்கையின் மனித உரிமை நிலவரங்கள் மற்றும் பொறுப்புக் கூறல் விடயங்கள் தொடர்பில் மார்ச் 4 ஆம் திகதி மனித உரிமைகள் பேரவையில் கவனத்தில் கொள்ளப்படவுள்ளது.

இதன் போது இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பில் ஐ. நா. மனித உரிமைகள்

11

## ஐ. நா. ஆணையரின் ஆலோசனைகளை பின்பற்றவேண்டிய அவசியமில்லை!

### நீதி அமைச்சர் விஜயதாஸ சொல்கிறார்

கொழும்பு, பெப். 12

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணிமனையின் ஆலோசனைகளை பின்பற்றவேண்டிய அவசியமில்லை என்று நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

“நாங்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தின் ஆலோசனைகளை செவிமடுக்கவேண்டிய அவசியமில்லை. அவர்களின் செயல்பாடுகள் மூலம் சாதகமான விளைவுகள் எதுவுமில்லை. அவர்களின் செயல்பாடுகள் எப்போதும் எதிர்மறையானவை.

எங்களின் சிவில் சமூகத்தினர் சில சட்டங்களை மாற்றவேண்டும் எனத் தெரிவித்துள்ளதால் நாங்கள் எங்கள் சமூகத்தினருடன் கலந்துரையாடுவோம். சர்வதேச

11

## மைத்திரியும் இந்தியாவுக்கு செல்கின்றார்!

கொழும்பு, பெப். 12

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அடுத்த வாரம் இந்தியா மற்றும் அமெரிக்கா செல்லவுள்ளார் என்று சுதந்திரக் கட்சியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்திய அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ அழைப்பிலேயே முன்னாள்

11

## ஜனாதிபதி, பொதுத் தேர்தலுக்கு 2 ஆயிரம் கோடி ரூபாய் தேவை!

### தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர்

கொழும்பு, பெப். 12

வரவுள்ள ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தலுக்கு 2 ஆயிரம் கோடி ரூபாய் தேவைப்படுவதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சமன் சிறீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

வரவுள்ள ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலுக்காக ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டு பிரேரணை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்திருந்தார். இது தொடர்பில், தேர்தல்கள் ஆணைக்குழு தலைவரிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், இந்த வருடம் ஜனாதிபதித் தேர்தல்

11

### தமிழ் அரசு பொது செயலர் விவகாரம்:

## குகதாசன் - சிறீநேசன் சந்திப்பு; முடிவெடுக்க 2 நாட்கள் அவகாசம்!

வவுனியா, பெப். 12

இலங்கை தமிழ் அரசு கட்சியின் பொதுச் செயலாளர் பதவி தொடர்பில் குகதாசன், சிறீநேசன் ஆகியோர் நேற்று வவுனியாவில் சந்தித்துப் பேசினர். கட்சியின் முக்கியஸ்தர்களும் பங்கேற்ற இந்த சந்திப்பில் இணக்கம் ஏதும் எட்டப்படவில்லை என்று அந்தக் கட்சி வட்டாரங்கள் மூலம் ஈழநாடு அறிந்து கொண்டது.

முடிவு கிடப்பில் உள்ளபோதும் அந்தப் பதவிகு தெரிவான ச. குகதாசன், பொதுச் செயலர் பதவியை கோரி வரும் ஞா. சிறீநேசன் மற்றும் இவர்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டிலுள்ள

11

## நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவும் சட்டம் குறித்து ஆய்வு!

கொழும்பு, பெப். 12

உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான சுயாதீன ஆணைக்குழுவை நிறுவுவதற்கான உத்தேச சட்டம் தொடர்பில் ஆலோசிப்பதற்காக உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறைக்கான இடைக்கால செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடல் அண்மையில் கொழும்பில் நடைபெற்றது.

பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் மற்றும் சட்டம் தொடர்பான பேராசிரியை சாவித்ரி குணசேகர ஆகியோரின் தலைமையில் இந்தக் கூட்டம் நடந்தது.

வடக்கு மற்றும் கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் குறைகளை நிவர்த்தி செய்வதில் பெரும் பங் காற்றக்கூடிய உண்மை மற்றும்

11

## இப்படியும் நடக்கிறது

ஜனாதிபதித் தேர்தலில் இரு முனைப்போட்டி அல்லது மூன்று முனைப்போட்டி ஏற்பட்டாலும் வெற்றி - தோல்வியை தீர்மானிக்கப் போவதில் பெரும்பாலும் தனி மனித ஆளுமையே முக்கிய இடத்தைப் பெறும் என்றே பரவலாக நம்பப்படுகின்றது.

ரணில் - சஜித் - அநுர என்று மூன்று பேர் போட்டியிட்டாலும் அவர்களில் நாட்டை வழிநடத்தக்கூடியவர் யார் என்று மக்கள் சிந்தித்து வாக்களிப்பார்கள் என்றே நம்பப்படுகின்றது.

ஆனால், இந்த ஜனாதிபதி தேர்தலுக்காக கட்சிகளிடையே கூட்டணிகள், அணி சேர்க்கைகள் நடைபெற்றாலும் அவர்களின் நோக்கம் எல்லாம் இதனையடுத்து நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில்தான் இருக்கின்றது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி தேர்தலுக்காக கட்சிகளை வளைத்துப்போடுவதிலும், தனக்கு எதிரான கட்சிகளை உடைப்பதிலும் கவனம் செலுத்தினாலும் தனது கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியை பலப்படுத்துவதிலோ அல்லது அதனை மீள்புனர்நிர்மாணம் செய்வதிலோ அதிக ஆர்வம் காட்டுவதாக இல்லை. இதனால் அவரின் கட்சிக்காரர்களே சலிப்படைந்தவர்களாக அடுத்து என்ன செய்வது என்று தெரியாதவர்களாக அங்கலாய்த்து வருகின்றனர்.

மறுபுறத்தில் ரணிலுக்கு ஆதரவான நிலைப்பாடோடு சின்னச்சின்ன அணிகளாக சிதறிப்போயிருக்கும் அனைவரையும் ஒரு குடையின்கீழ் கொண்டுவருவதில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க அதிக அக்கறைகாட்டி வருகின்றார்.

தான் முன்னர் போட்டியிட்டு வெற்றி பெற்ற கதிரை சின்னத்துடன்கூடிய பொது ஜன ஐக்கிய முன்னணியையோ அல்லது வெற்றிலை சின்னத்திலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியையோ மீண்டும் கட்டியெழுப்புவதற்கு அவர் முயன்று வருகின்றமை பற்றி முன்னரும் இந்தப் பத்தியில் எழுதியிருந்தோம்.

இப்போது அந்தக் கூட்டணியில் சுமார் இருபது கட்சிகள் ஒன்றிணைந்திருக்கின்றன என்கின்றன தெற்கு செய்திகள். ரணிலின் வெற்றிக்காக மிக அண்மையில் உருவான நிமால் லான்சா தலைமையிலான அணியும் சந்திரிகாவின் இந்தக் கூட்டில் இணைந்திருக்கின்றபோதிலும், அவ்வாறு அவர்களோடு இணைவதால் தமக்கான முக்கியத்துவம் குறைவடைகின்றது என்ற எண்ணம் அவர்களில் சிலருக்கு ஏற்பட்டிருப்பதாகவும் அதனால் அந்த அணியில் இணைந்துகொள்வதா அல்லது ஐக்கிய தேசியக் கட்சியுடன் மட்டும் கூட்டணி அமைப்பதா என்று குழப்பத்தில் இருக்கின்றனராம் அவர்கள். ஆனால், இது போன்ற பெரும் அணி ஒன்றோடு சேர்ந்தால்தான் அடுத்து வரும் பாராளுமன்றத் தேர்தலில் அதிக இடங்களைப் பெறலாம் என்பதும் அதுவும் தமக்கு மிகவும் பழகிப்போன வெற்றிலை சின்னத்தில் போட்டியிடுவது வசதியானது என்றும் அவர்கள் சிந்திப்பதால், இந்தக் கூட்டணியில் சேர்வது தொடர்பான முடிவு தாமதப்பட்டுக் கொண்டே செல்கின்றதாம். அதேவேளை தமது முதலாவது பொதுக்கூட்டத்தை மிகவும் வெற்றிகரமாக கம்பஹாவில் நடத்தி முடித்துவிட்ட அவர்கள் தமது அடுத்த பொதுக்கூட்டத்தை கொழும்பில் ஹைட்பார்க்கில் எதிர்வரும் இருபத்தியெழாம் திகதி நடத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கின்றனராம்.

இதேவேளை தனது கூட்டணிக்கு இருபது பேரைக் கொண்ட தலைமைத்துவ சபை ஒன்றை அமைப்பதற்கான முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றார் சந்திரிகா என்கின்றன அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள்.

இந்த தலைமைத்துவ சபையில், மைத்திரிபால சிறிசேன, அநுரபிரியதர்சன யாப்பா, சுசில் பிரேமஜயந்த, நிமல் லான்சா, குமார வெல்கம, நசீர் அஹமட், அதாவுல்லா ஆகியோருடன், ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தி ராஜித சேனரட்ன, சரத் பொன்சேகா ஆகியோரும் இடம்பெறவிருக்கின்றனராம். சிறிய கட்சிகளையும் சேர்த்துக்கொண்டு சுமார் இருபது கட்சிகள் இந்த அணியில் இடம்பெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அந்த அணியில் சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் சில எம். பிக்களையும் அந்தக் கட்சியிலிருந்து பிரித்தெடுத்து இணைத்துக்கொள்ள சிலர் காய்களை நகர்த்தி வருகின்றனர்.

அண்மையில் பாராளுமன்றில் ஜனாதிபதி கொள்கை விளக்க உரையாற்றியபோது, அதனை பகிஷ்கரிப்பது என்று ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்திருந்தபோதிலும், அவ்வாறு அதனை பகிஷ்கரிக்காது சபை அமர்வுகளில் கலந்துகொண்ட சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் உறுப்பினர்களையும் அவர்களின் கட்சிகளிலிருந்து பிரித்து எடுக்க ரணில் தரப்பு முயன்று வருகின்றதாம்.

எதுவோ, தேர்தல் நெருங்க நெருங்க இதுபோன்ற பல கட்சித் தாவல்கள் நடக்கலாம் என்கின்றார்கள் விசயம் அறிந்தவர்கள்.!

- ஊர்க்குருவி.

# சத்திர சிகிச்சை செய்யும் சிறார்க்கு ஜனாதிபதி நிதியம் மூலமாக உதவி!

கொழும்பு, பெப். 12

சிறுவர்களுக்கு ராகமை போதனா மருத்துவமனையில் மேற்கொள்ளப்படும் கல்லீரல் மாற்று சத்திரசிகிச்சை மற்றும் சிறீ ஜெயவர்த்தனபுர மருத்துவமனையில் மேற்கொள்ளப்படும் செவிப்புலன் சத்திரசிகிச்சை என்பவற்றுக்காக ஜனாதிபதி நிதியத்திலிருந்து இருந்து நிதியுதவி வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன்படி, ராகமை போதனா மருத்துவமனையில் 16 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கு கல்லீரல் மாற்று அறுவைச் சிகிச்சைக்கு முன்னும் அதன் பின்னரான பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைக்காக இந்த நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

இதன்படி, உரிய நிபந்தனைகளை பூர்த்தி செய்பவர்களுக்கு கடந்த ஜனவரி 01ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ஜனாதிபதி நிதியத்திலிருந்து 10 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

இதேநேரம், பிறக்கும் போதே செவிப்புலன் குறைபாடுகளுடன் பிறக்கும் குழந்தைகளுக்கு, பிறந்து 2 வருடங்களின் பின்னர் குழந்தைகளின் மூளை வளர்ச்சிக்காக செவிப்புலன் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது.

தற்போது இந்த அறுவை சிகிச்சை ஒரு சில அரசாங்க மருத்துவமனைகளில் மட்டுமே செய்யப்படுவதால், பாதிக்கப்பட்ட சிறுவர்கள் அரச மருத்துவமனைகளில் இதற்காக காத்திருப்பு பட்டியலில் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சிறீ ஜெயவர்த்தனபுர மருத்துவமனையில் இந்த சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படுவதோடு, இதனூடாக சுமார் 30 முதல் 40 இலட்சம் ரூபாய் வரையான பெறுமதி கொண்ட கருவிகள் பொறுத்தப்படுகின்றன.

சுகாதார அமைச்சால் இந்த கருவி இலவசமாக வழங்கப்படுகின்ற போதிலும் சத்திரசிகிச்சைக்கு அதிக செலவு ஏற்படுகிறது. எனவே, சத்திர சிகிச்சைக்கான செலவாக ஆறு இலட்சம் ரூபாயை ஜனாதிபதி நிதியத்திலிருந்து வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பணித்துள்ளார். (ஐ)

# 82.94 கோடி டொலர்கள் ஜனவரியில் வருமானம்!

கொழும்பு, பெப். 12

கடந்த ஜனவரி மாதம் வெளிநாட்டு பணியாளர்கள் மூலம் 48 கோடியே 76 இலட்சம் டொலரும் சுற்றுலா மூலம் சுற்றுலா மூலமாக 34 கோடியே 18 இலட்சம் டொலருமாக 82 கோடியே 94 இலட்சம் டொலர் வருமானமாகக் கிடைத்துள்ளது என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

கடந்த ஜனவரி மாதத்தில் 48 கோடியே 76 இலட்சம் அமெரிக்க டொலர் வெளிநாட்டு பணியாளர்களால் நாட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இது கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது, 11.4 சதவீத அதிகரிப்பு என இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் கடந்த வருடம் ஜனவரி மாதம் 43 கோடியே 75 இலட்சம் அமெரிக்க டொலர் நாட்டுக்கு தொழிலாளர்களால் அனுப்பப்பட்டது.

இதேவேளை, கடந்த ஜனவரி மாதத்தில், சுற்றுலாவினால் கிடைக்கப்பெற்ற வருமானம், 122 சதவீதமாக அதிகரித்துள்ளது. இதற்கமைய, 34 கோடியே 18 இலட்சம் அமெரிக்க டொலர் அந்நிய செலாவணியாக பெற்றப்பட்டுள்ளது.

கடந்த வருடம் சுற்றுலா துறையின் ஊடாக 15 கோடியே 35 இலட்சம் அமெரிக்க டொலர் கிடைக்கப்பெற்றுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. (ஐ)

# யு. பி. ஐ. கட்டணம் செலுத்தும் முறைமை இன்று முதல் இங்கும்!

கொழும்பு, பெப். 12

இந்தியாவின் யு. பி. ஐ. (UPI) என்ற ஒருங்கிணைந்த கட்டணம் செலுத்தும் முறைமை இன்று முதல் நாட்டில் அறிமுகப்படுத்தப்படும் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இணையவழி முறையின் ஊடாக கொழும்பில் இதனை அறிமுகப்படுத்தவுள்ளனர்.

அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி இதனைத் தெரிவித்துள்ளார்.

யு. பி. ஐ. என்ற ஒருங்கிணைந்த கட்டணம் செலுத்தும் முறைமை 2016 ஆம் ஆண்டில் இந்திய தேசிய கொடுப்பனவு கூட்டுத்தாபனத்தால் உடனடியா பணம் செலுத்தும் முறைமையாக அறிமுகப்படுத்தப்பட்டது.

இது பல வங்கிக் கணக்குகளை, ஒரே கைபேசி செயலி ஊடாக இணைக்கும் அமைப்பாகும், இந்த கட்டண முறையானது கைபேசிகள் மூலம் வங்கிகளுக்கு இடையேயான மற்றும் தனிப்பட்ட வர்த்தக பரிவர்த்தனைகளை எளிதாக்குகிறது. இதன்மூலம், இலங்கையின் சுற்றுலா வர்த்தகம் மேம்படும் எனவும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். (ஐ)

# காற்றின் தரம் கொழும்பில் கடும்வீழ்ச்சி

கொழும்பு, பெப். 12

கொழும்பு மாவட்டத்தில் காற்றின் தரம் வீழ்ச்சியடைந்துள்ளது.

ஐக்கிய அமெரிக்க காற்று தர சுட்டெண்ணுக்கு அமைய நேற்றைய தினம் எதுல்கோட்டே பகுதியில் காற்றின் தரம் 172 சுட்டெண் புள்ளியாக இருந்தது.

கொழும்பு நகரில் காற்றின் தரம் 157 சுட்டெண் புள்ளியாக பதிவாகியுள்ளது.

இதேநேரம், மஹரகம மற்றும் பதுளை, தம்புள்ளை மொனராகலை உள்ளிட்ட பகுதிகளில் காற்றின் தரம் சுமார் 150 புள்ளி களாக ஐக்கிய அமெரிக்க காற்று தர சுட்டெண் அட்டவனையில் பதிவாகியுள்ளது. (ஐ)

# கொள்ளையிட முயன்றவர் அடித்துக் கொல்லப்பட்டார்

கொழும்பு, பெப். 12

வீடொன்றுக்குள் புகுந்து கொள்ளையிட முயன்ற 3 பேரில் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவம் மினுவாங்கொடையில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மினுவாங்கொடை, யக்கொடமுல்ல பகுதியில் உள்ள வீடொன்றில் கொள்ளையிட முற்பட்ட 3 பேரில் ஒருவரே அடித்துக் கொல்லப்பட்டுள்ள நிலையில், ஏனைய இருவரும் தப்பிச் சென்றுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu | ඊළනාඩු
12.02.2024 திங்கட்கிழமை
சோபகிருது வருடம், தை 29

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# திருமலையில் கப்பல் கட்டும் தளம்

திருகோணமலையில் கப்பல் கட்டும் தளமொன்றை நிர்மாணிப்பது தொடர்பில் இந்தியப் பாதுகாப்பு அமைச்சு ஆராய்ந்துள்ளது. கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுடனான மரியாதை நிமித்தமான சந்திப்பின் போதே இந்தத் தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. திரு கோணமலை அண்மைக்காலத்தில் அதிக முக்கியத்துவத்தைப் பெற்று வருகின்றது வெளிப்படையானது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுடன் இணைந்து திருகோணமலைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யப் போவதாகக் கூறிவரும் நிலையில்தான் திருகோணமலை அதிக கவனத்தைப் பெற்றிருக்கின்றது.

திருகோணமலை ஒரு மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த இடம். இந்தியாவின் அதிக அவதானத்துக்கு உட்பட்ட இடம். திருகோணமலை மீதான மூலோபாய கரிசனை இந்தியாவின் தேசிய பாதுகாப்போடு தொடர்புபட்டது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் திருகோணமலைத் துறைமுகம் உள்ளடக்கப்பட்டது. - அதாவது, இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் நோக்கில் எந்தவொரு நாட்டின் இராணுவ தேவைகளுக்கும் திருகோண மலையைப் பயன்படுத்த முடியாதென்னும் உடன்பாடு எட்டப்பட்டது. இந்தப் பின்புலத்தில் திருகோணமலையின் அபிவிருத்தி விடயங்களில் இந்தியாவின் கரிசனைகளை இலங்கை புறந்தள்ள முடியாது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து புதுடில்லிக்கு முதல் பயணத்தை மேற்கொண்ட போது திருகோணமலைக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையிலான எண்ணெய் குழாய் பொருத்தும் திட்டம் தொடர்பில் பேசியிருந்தார். இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ், திருகோணமலை எண்ணெய்க் குதங்களை மேம்படுத்துவது தொடர்பான உடன்பாடும் எட்டப்பட்டது.

எனினும், உள்நாட்டு யுத்தத்தின் காரணமாகத் திட்டத்தை முன்னெடுக்க முடியாமல் போனது. யுத்தம் முடிவுற்றதைத் தொடர்ந்து திட்டங்களை முன்னெடுப்பதற்கான சாதகமான சூழல் ஏற்பட்டபோதிலும் ராஜபக்ஷ குடும்பத்தின் சீன சார்பு நகர்வுகளால் திட்டங்களை முன்னெடுப்பதில் மீண்டும் சிக்கல்கள் ஏற்பட்டன. எனினும், தற்போது நிலைமைகளில் சில முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இலங்கையின் - அதன் பெரும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள வேண்டுமாயின் இந்தியாவுடன் இணைந்து மாபெரும் திட்டங்களை முன்னெடுக்க வேண்டியது கட்டாயமானது.

1987 இந்திய - இலங்கை ஒப்பந்தத்தைத் தொடர்ந்து 1988இல் நடைபெற்ற இணைந்த வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலில் வெற்றிபெற்ற ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி திருகோணமலையை தலைநகரமாகக் கொண்டே குறுகிய காலம் தமிழ் அரசு ஒன்றை முன்னெடுத்தது. பின்னர் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகளால் மாகாண சபை நிர்வாகம் சீர்குலைந்தது. பிரேமதாஸ அரசாங்கம் திட்டமிட்டு இந்தியாவை வெளியேற்றுவதில் வெற்றி பெற்றது. இதனைத் தொடர்ந்து, இந்தியாவுக்கும் ஈழத் தமிழர் விவகாரத்துக்குமான தொடர்பு அறுந்துபோனது. 2009இல் யுத்தம் முடிவுற்றதைத் தொடர்ந்து மீண்டும் ஈழத் தமிழ் கட்சிகள் இந்தியாவை நோக்கித் திரும்பின. இவ்வாறானதொரு நிலையில் மாகாண அரசாங்கத்தை மீண்டும் ஆற்றலுள்ள வகையில் முன்னெடுப்பதற்கு இந்தியா உதவ வேண்டும் என்னும் கோரிக்கைகளை தமிழ்க் கட்சிகள் முன்வைத்துவருகின்றன.

இந்தியா தங்களை அழைத்துப் பேச வேண்டும் என்றவாறான கோரிக்கையையும் தமிழ்க் கட்சிகள் முன்வைத்து வருகின்றன. தற்போது, வடக்கு - கிழக்கில் தமிழ் மக்களிடம் எவ்விதமான அதிகாரங்களும் இல்லாத நிலையிலேயே அரசாங்கம் பல்வேறு திட்டங்கள் தொடர்பில் பேசிவருகின்றது.

# கோயில்களில் பணத்தைக் கொட்டுவதால் யாழ்ப்பாணத்தவர் விரக்தியா?

**மறவன்புலவு சச்சிதானந்தன்**
(தலைவர், இலங்கை சிவசேனை)

ஈழநாடு நேற்றைய இதழில் நோயல் நடேசனின் கட்டுரை படித்த சிவசேனைத் தொண்டர்கள் சார்பில் எழுதுகிறேன்.

கோயில் எனில் சைவம் அல்லது இந்து சமயம் சார்ந்த வழிபாட்டு இடங்கள். தேவாலயம் எனில், சிங்களவர் இந்துக் கோயில்களைக் குறிப்பர். தமிழர் கிறித்தவ வழிபாட்டிடங்களைக் குறிப்பர்.

நேற்று ஞாயிற்றுக் கிழமை ஈழநாடு இதழ். நோயல் நடேசன் கட்டுரை. கோயில் என்ற சொல்லும் உண்டு. தேவாலயம் என்ற சொல்லும் உண்டு. முதல் சொல்லில் இந்து வழிபாட்டிடங்களை, இரண்டாவது சொல்லில் கிறித்துவ வழிபாட்டிடங்களை நோயல் நடேசன் குறிக்கிறார். யாழ்ப்பாணத்தவரிடையே விரக்தியைக் கண்டேன். அந்த விரக்தியை வெளிநாட்டவர் ஊக்குவிக்கின்றனர். பெருந்தொகைப் பணத்தைக் கோயில்களில் கொட்டி ஊக்குவிக்கின்றனர்.

இக்கருத்தைத் தன் சொல்லாட்சியில் தந்துள்ளார் நடேசன். போருக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் புதிதாக இந்துக் கோயில்கள் எதையும் எவரும் கட்டவில்லை. பழைய கோயில்களைப் புதுப்பித்து வருகிறார்கள். அங்கு பரம்பரை பரம்பரையாக நடந்த விழாக்களை எடுத்து வருகிறார்கள். இதற்காக வெளிநாட்டவர் புலம்பெயர்ந்தோர் பணமும் சேர்ந்து கொள்கிறது. இதனால் யாழ்ப்பாணத்தாருக்கு விரக்தி என்கிறார் நடேசன்.

இடிந்த கோயிலைப் புதுப்பிப்பது யாழ்ப்பாண மக்களுக்கு விரக்தியைத் தருகிறதா? நடந்த விழாக்களைத் தொடர்ந்து நடத்துவது யாழ்ப்பாண மக்களுக்கு விரக்தியைத் தருகிறதா? யாழ்ப்பாணத்தில் தோராயமாக 100 கிறித்தவ தேவாலயங்கள் போருக்குப் பின் புதிதாக அமைந்துள்ளன.

பல வீடுகள் வழிபாட்டு இடங்களாக, செபக் கூடங்களாக மாறி உள்ளன. முன்பு கிறித்துவ தேவாலயத்துக்குள்ளே நடந்தன வழிபாடுகள் விழாக்கள். இப்பொழுது மதமாற்றுச் சபைகளால் வீடுகள் தோறும் மதுவும் மாமிசமும் மாதுவும் கலந்த விழாக்களாகின. முழுக்க முழுக்கச் சைவ கிராமங்களில் ஏதோ ஒரு வீட்டில் இவ்வாறு சபையினர் நடத்தி வருவதால் அந்த ஊர்ச் சைவ மக்கள் விரக்தி அடைந்ததை நோயல் நடேசன் காணவில்லை.

வட்டுக்கோட்டையில் இத்தகைய சபையினரை சைவ மக்கள் விரட்டினர். பொன்னாலையில் விரட்டினர். சுன்னாகத்தில் விரட்டினர். பண்டத்தரிப்பில் விரட்டினர். நாவற்குழியில் விரட்டினர். கைதடியில் விரட்டினர். அரியாலையில் விரட்டினர். கொக்குவிலில் விரட்டினர். கோண்டாவிலில் விரட்டினர். சான்றுகளோடு இத்தகைய நூற்றுக் கணக்கான விரட்டல்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

அச்சுவேலியில் தொண்டைமனாறில் கொடிகாமத்தில் கோப்பாயில் நீர்வேலியில் மாவிட்டபுரத்தில் அரசு காணியிலோ தனியார் காணியிலோ அரசு அனுமதியின்றி உரிமையாளர் உடன்பாடு இன்றியும் புதிய கிறித்தவ தேவாலயங்கள் அமைந்ததால் யாழ்ப்பாணத்துச் சைவ மக்கள் கடும் விரக்தியில் உள்ளதை நோயல் நடேசன் அறிய மாட்டார்.

அமெரிக்க ஐரோப்பிய, அவுஸ்திரேலியா கிறித்தவ அமைப்புகளின் நிதி வளங்கள் யாழ்ப்பாணத்துள் புதிய தேவாலயங்களுக்காகவும் மத மாற்றத்திற்காகவும் கோடி கோடியாகக் கொட்டப்படுவதை நோயல் நடேசன் தெரிந்தாலும் வெளியே சொல்ல மாட்டார்.

2013 அல்லது 2014. உலகத் தமிழர் பேரமைப்புத் தலைவராகவும் பொறுப்பாளராகவும் இருந்த அருட்தந்தை இம்மானுவேல் அரசின் ஆதரவோடு யாழ்ப்பாணம் வருகிறார். தொலைக்காட்சிப் பேட்டியிலே.. “கோயில் கோயிலாகக் கட்டுகிறார்களே...” என ஆதங்கத்துடன் கேட்கிறார்.

1619 ஜூன் 5இற்கு முன்பு கிறித்தவ கத்தோலிக்க முகமதிய வழிபாட்டிடங்கள் இல்லாத நிலமே ஈழத் தமிழரின் மரபுவழித் தாயகம். பல்லாயிரம் ஆண்டுகளாகத் தொடரும் நாக வழிபாடு, வேம்பு வழிபாடு, பாம்பு வழிபாடு, இயற்கை வழிபாடு சார்ந்த கடவுளர்களின் வழிபாடு, அதற்கான திருக்கோயில்கள் இவை இலங்கை தமிழரின் மரபுவழித்தாயக வழிபாட்டிடங்கள். புத்த சமய வழிபாட்டிடங்கள் புத்தருக்குப் பின் இலங்கையில் தோன்றின.

ஒன்று இரண்டு நிகழ்வுகளைத் தவிர, இந்து சமய வழிபாட்டிடங்களை இடித்துத் தரைமட்டமாக்கிப் புத்த வழிபாட்டு இடங்களைப் புத்தர் எந்த ஓர் இடத்திலும் இலங்கையில் அமைக்கவில்லை.

1619 ஜூன் 5இற்குப் பின்பு யாழ்ப்பாண குடாநாட்டுக்குள் 400க்கும் கூடுதலான இந்துக் கோயில்களை இடித்தழித்து அதற்கு மேலே கத்தோலிக்கக் கோயில்களை இடி இலேவரா கட்டினான் என வரலாற்று பதிவாளர் குவேரசர் குறித்திருப்பதை யேம்சு எமேர்சன் ரெனன்டர் மீளவும் குறிக்கிறார்.

நல்லூர் சங்கிலியன் தோப்பு செம்மணியில் தூய யேம்சர் தேவாலய வடகிழக்கு மூலையில் நல்லூர் முருகன் கோயில் அடித்தளக் கட்டுமானம் இன்றும் இருக்கிறதே! நோயல் நடேசன் பார்க்கவில்லையா? யாழ்ப்பாணம் மக்களின் விரக்தியை அவர் காணவில்லையா?


பாபர் மசூதியாக தூய யேம்சர் தேவாலயம் உள்ளதே என யாழ்ப்பாண மக்கள் விரக்தியின் விளிம்பில் நெஞ்சு வலிக்கிறதை நோயல் நடேசன் காணவில்லையா?

போர்த்துக்கேயர் கத்தோலிக்க ஆட்சி மறைந்து,

ஒல்லாந்தக் கிறித்தவ ஆட்சி மறைந்து, ஆங்கிலேயக் கிறித்தவ ஆட்சி மறைந்து

(05ஆம் பக்கம் பார்க்க)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஈழநாடு

**பெப்ரவரி - 12 திங்கட்கிழமை**
சோபகிருது வருடம் - தை 29
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : திரிதியை




**மேடம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். கல்யாண முயற்சிகள் பலிதமாகும். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். சிறப்பான நாள்.

**இடபம்**
உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார். சாதித்துக் காட்டும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும்.உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எந்த காரியத்தை தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். நிதானம் தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். சக ஊழியர்களால் ஆதாயமும் உண்டு. திறமைகள் வெளிப்படும் நாள்.

**கன்னி**
கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். அதிகாரிகளிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**துலாம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். அக்கம் - பக்கம் வீட்டாரின் அன்பு தொல்லை குறையும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள். புதுமை படைக்கும் நாள்.

**விருட்சிகம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். வியாபாரத்தில் உங்கள் ஊழியர்கள் உங்களுக்கு உதவுவார்கள். நன்மை கிட்டும் நாள்.

**தனுசு**
துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்றுத் தீரும். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும். தைரியம் கூடும் நாள்.

**மகரம்**
கணவன் - மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். தோற்ற பொலிவுக் கூடும்.வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். அலுவலகத்தில் மரியாதை கூடும். மகிழ்ச்சியான நாள்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் அனாவசிய பேச்சை தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம். வளைந்து கொடுக்க வேண்டிய நாள்.

**மீனம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

# முருகனின் உயிருக்கு ஆபத்து காப்பாற்ற நடவடிக்கை எடுங்கள்!

## அவரின் மனைவி நளினி கோரிக்கை

திருச்சி, பெப். 12

வேலூர் சிறையைவிட திருச்சி சிறப்பு முகாம் கொடுமையாக உள்ளதால் உயிருக்கு ஆபத்தான நிலையில்இருக்கும் முருகனைக் காப்பாற்ற உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக அரசுக்கு, முருகனின் மனைவி நளினி கோரிக்கை விடுத்துள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று சிறையில் அடைக்கப்பட்டிருந்த முருகன், ஜெயக்குமார், றொபேர்ட் பயஸ், சாந்தன் ஆகியோர் உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர். அவர்கள் மீது சில வழக்குகள் நிலுவையில் இருப்பதால், திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ளசிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இதில், சாந்தன் உடல்நலக்குறைவு காரணமாக சென்னை மருத்துமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இதேபோல, முருகன், றொபேர்ட் பயஸ் ஆகியோர், தங்களை பொலிஸார் சுதந்திரமாக இருக்க விடுவதில்லை. எனவே, விடுதலை செய்ய வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், தமிழக அரசின் தலைமைச் செயலர், திருச்சி மாவட்ட ஆட்சியர் மா. பிரதீப் குமார், காவல் ஆணையர் என். காமினி ஆகியோருக்கு முருகனின் மனைவி நளினி கடிதம் எழுதயுள்ளார்.

அதில், "நானும், எனது கணவர் முருகனும் கடந்த 11.11.2022 ஆம் திகதி உச்ச நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டோம். எனது கணவர் இலங்கை நாட்டைச் சேர்ந்தவர் என்பதால் திருச்சி முகாமில் அடைத்துள்ளனர். அங்கு அவர் பல்வேறு துன்பங்களை அனுபவித்து வருகிறார். அவர் சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டாலும், பொலிஸின் கட்டுப்பாட்டில்தான் உள்ளார். அவர் முன்பு இருந்த வேலூர் சிறையைவிட திருச்சி சிறப்புமுகாம் கொடுமையாக உள்ளது.

எனது கணவர் 12 நாட்கள் சாப்பிடாமல், உயிருக்கு ஆபத்தான நிலையில் இருக்கிறார். அவருக்கு முகாமில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்படாததால் உயிருக்கு எந்த நேரத்திலும் ஆபத்து ஏற்படக்கூடும். எனவே, என் கணவரின் உயிரைக் காப்பாற்ற வேண்டும் - இவ்வாறு கடிதத்தில் நளினி குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# செயற்கை நுண்ணறிவு பாதையில் தமிழ் வெற்றியுடன் பயணிக்கட்டும்!

## முதல்வர் ஸ்டாலின்



சென்னை, பெப். 12

செயற்கை நுண்ணறிவுப் பாதையில் தமிழ்மொழியை வெற்றிகரமாகப் பயணிக்க வைக்க வேண்டும் - என முதல்வர் மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

"செயற்கை நுண்ணறிவு யுகத்தில் மொழித் தொழில்நுட்பத்துக்காக இந்தியாவிலேயே முதன்முதலாக மாநாடு நடத்துவது தமிழக அரசுதான் என்று சொல்லிக் கொள்வதில் பெருமை அடைகிறேன். குறுஞ்செய்தி முதல் அனைத்து தொடர்புகளையும் முடிந்த வரை தமிழில் கையாண்டால் தலைமுறைகள் தாண்டியும் தமிழ் வாழும்" என்றும் அவர் கூறினார்.

சர்வதேச கணித்தமிழ் மாநாட்டு நிறைவு விழாவில் தமிழக முதல்வர் ஸ்டாலினின் வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஒவ்வொரு நாளும் தொழில் நுட்பம் வளர்ந்து வருகிறது. தொழில்நுட்பத்தில் மொழியின் முக்கியத்துவம் அதிகரித்தும் வருகிறது. எந்த விதமான தொழில்நுட்பம் வந்தாலும் அவை அனைத்திலும் தமிழ் வாழ வேண்டும், ஆள வேண்டும் என்பதுதான் எங்களது நோக்கமாகும். மொழி வாழ்ந்தால் இனம் வாழும். மொழி தாழ்ந்தால் இனம் தாழும். 'தமிழை வளர்த்து தமிழனை உயர்த்துவோம்' என்பதுதான் எமது அரசின் நோக்கம்.

எப்போது தோன்றியது என்று கண்டறியப்பட முடியாத தமிழ்மொழியை, எப்போதும் சிறப்புற வைக்க இந்தப் பன்னாட்டுக் கணித்தமிழ் மாநாடு 24 அடித்தளம் அமைக்கும் என்பதில் துளியளவும் அய்யமில்லை. செயற்கை நுண்ணறிவு யுகத்தில் மொழித் தொழில்நுட்பத்துக்காக இந்தியாவிலேயே முதன்முதலாக மாநாடு நடத்துவது தமிழக அரசுதான் என்று சொல்லிக் கொள்வதில் பெருமை அடைகிறேன். இந்தியாவில் வேறு எந்த மாநிலமும் மொழிக்காக முன்னெடுக்காத பெருந் திட்டம் இந்த மாநாடு. மொழி காக்க உயிரையே கொடுத்தவர்கள் தமிழர்கள் என்பதும் நமது வரலாறுதான்.

செயற்கை நுண்ணறிவுப் பாதையில் தமிழ்மொழியை வெற்றிகரமாகப் பயணிக்க வைக்க வேண்டும். தொழில்நுட்பங்களுக்கு ஏற்பத் தமிழ்மொழி, தகவமைக்கப்பட வேண்டும். ஆங்கிலம் போன்ற மொழிகளைப் போல தமிழில் தொழில்நுட்பச் சேவைகள் அனைத்தும் கிடைக்கத் தமிழக அரசும் ஆவன செய்யும். உலகளாவிய நிறுவனங்கள் வெளியிடும் மென்பொருட்கள் மற்ற மொழிகளில் வெளியாகி, தமிழுக்குக் காலதாமதமாக வருகிறது. இந்த இடைவெளியை குறைத்தாக வேண்டும். ஆங்கிலம் போன்ற மொழிகளுக்கு மென்பொருட்கள் வரும் போதே தமிழுக்கும் வந்தாக வேண்டும். அத்தகைய பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தமிழ்மொழி சார்ந்த வளத்தையும் வழிகாட்டுதல்களையும் தமிழக அரசு வழங்கும். (ஐ)

# ஒரேநாடு ஒரே தேர்தல் சட்டம் தி. மு. க. மீண்டும் எதிர்ப்பு!

புதுடில்லி, பெப். 12

ஒரே நாடு ஒரே தேர்தல் நமது அரசியல் சாசனத்திற்கு எதிரானது" என தி. மு. க. மீண்டும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டத்தை கைவிட வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவுக்கு தி. மு. க. கடிதம் எழுதியிருந்தது. இந்நிலையில், ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, ராம்நாத் கோவிந்தை தி. மு. க. எம்.பி. வில்சன் நேரில் சந்தித்து மனு அளித்தார்.

அந்த மனுவில், ஒரே நாடு ஒரே தேர்தல் என்பது நடைமுறைக்கு சாத்தியமற்றது. எனவே கைவிட வேண்டும். அரசியல் சட்டத்துக்கும் கூட்டாட்சி தத்துவத்துக்கும் ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டம் எதிரானது.

ஒரே நேரத்தில் பாராளுமன்றத்துக்கும் சட்ட சபைகளுக்கும் தேர்தல் என்பது அரசியல் சட்டத்தின் அடிப்படை அம்சத்துக்கு எதிரானது - என்றுள்ளது. (ஐ)

# கட்சியின் அடுத்த கட்டம் குறித்து ஜ. த. தே. கூட்டணி ஆராய்வு

யாழ்ப்பாணம், பெப். 12

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியை அடுத்தகட்டமாக கட்டியெழுப்புவது தொடர்பில் அந்தக் கட்சி ஆராய்ந்துள்ளது. மெய்நிகர் வழியில் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் கூடி ஆராய்ந்துள்ளனர்.

இதுசம்பந்தமாக அக்கட்சியின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிக்கையில்,

தற்போதைய நிலையில் எமது கூட்டணியில் அடுத்த கட்டமாக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்திருந்தோம்.

விசேடமாக, மாவட்ட ரீதியான கிளைகளை கட்டியெழுப்புதல் மற்றும் மாவட்ட ரீதியான கலந்துரையாடல்களை தொடர்ச்சியாக முன்னெடுத்தல் உள்ளிட்ட விடயங்களில் நடவடிக்கைகள் எடுப்பது பற்றி ஆராய்ந்தோம்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இந்தச் செயல்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படவுள்ளன. இதனையடுத்து நாம் மக்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளோம் - என்றார். (ஐ)

# பனை மரக் குற்றிகளை ஏற்றிச்சென்றவர் கைது!

தென்மராட்சி, பெப். 12

சட்ட விரோதமாக 12 பனை மரக் குற்றிகளை ஏற்றிச் சென்றவர் மட்டுவிலில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது மரக்குற்றிகள் மற்றும் அவற்றை கொண்டு செல்ல பயன்படுத்தப்பட்ட வாகனத்துடன் சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டு சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளின் பின்னர், அவரை சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)



# மடு காட்டில் கசிப்பு காய்ச்சிய இருவர் அதிரடி படையால் கைது!

மன்னார், பெப். 12

மடு - பண்டிவிரிச்சான் பகுதியில் விசேட அதிரடிப் படையினரின் சுற்றிவளைப்பில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது, காட்டுப் பகுதியில் ஆயிரம் லீற்றர் கோடா மற்றும் 35 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டதுடன் அதனை உடைமையில் வைத்திருந்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா, மடுகந்தை விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்தே இந்த சுற்றிவளைப்பு இடம்பெற்றது.

கைது செய்யப்பட்ட இருவரும், மீட்கப்பட்ட பொருட்களுடன் மடு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை மடுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# விபத்தில் இறந்தவருக்காக வீதியில் நினைவாலயம்!



வடமராட்சி, பெப். 12

கடந்த ஜனவரி 12ஆம் திகதி வீதி விபத்தில் உயிரிழந்த வெற்றிலைக்கேணி பகுதியை சேர்ந்த அமரர் அன்ரன் பிலிப்பின்தாஸ் நினைவாக நினைவாலயம் ஒன்று அமைக்கப்பட்டு நேற்று திறந்துவைக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் பணி முடித்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தவேளை வெற்றிலைக்கேணி கோரியடி பகுதியில் இராணுவ உழவு இயந்திரத்துடன் மோதி இரண்டு பிள்ளைகளின் தந்தையான குறித்த குடும்பஸ்தர் உயிரிழந்தார்.

அவருடைய நினைவாக அவர் உயிரிழந்த அதே இடத்தில் நினைவாலயம் ஒன்று அமைக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் பங்குத் தந்தை அமல்ராஜ் அடிகளார், தேசபந்து ரமேஷ் அமதி அடிகளார் ஆகியோர், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர். (ஐ-02)

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சை கோரிய சரத்?

கொழும்பு, பெப். 12

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவை ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரான சரத் பொன்சேகா சந்தித்த போது பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு பதவியைக் கோரினார் என்று ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா கடந்த 7 ஆம் திகதி பாராளுமன்றத்தில் உள்ள ஜனாதிபதியின் பணிமனையில் ரணில் விக்கிரம சிங்கவை சந்தித்து சுமார் 20 நிமிடங்கள் கலந்துரையாடினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆஷு மாரசிங்கவால் ரணிலை சந்திக்கும் வாய்ப்பு அவருக்கு ஏற்படுத்தி கொடுக்கப்பட்டது.

பாராளுமன்றத்தில் ஜனாதிபதி உரையாற்றிய நாளன்று நடைபெற்ற தேநீர் விருந்தில் பங்கேற்ற போதே சரத் பொன்சேகாவின் பிரசன்னம் அஷுவினால் தெரிவிக்கப்பட்டது.

இந்த சந்திப்பின்போதே பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு பதவியை சரத் பொன்சேகா கோரினார்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சரத் பொன்சேகாவுக்கும் இடையிலான சந்திப்பு முடிவடைந்த நேரத்தில் ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் ரணில் விக்கிரமசிங்கவை சந்திக்க வந்திருந்தனர். சரத் பொன்சேகாவுடன் என்ன விடயம் உரையாடினீர்கள் என்று ரணில் விக்கிரமசிங்கவிடம் கேட்டனர். சிரித்துக் கொண்டே ரணில் விக்கிரமசிங்க எதுவும் உரையாடவில்லை என்று கூறினார் - எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



வடமராட்சி, பெப். 12

வடமராட்சி கிழக்கு யா/ஆழியவளை சி. சி. த. க. வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் பாடசாலை அதிபர் க.சிவநேசன் தலைமையில் நடைபெற்றது.

புதிய நிர்வாகத்தின் விவரம் வருமாறு,

காப்பாளர்கள் - அ. சா. அரியகுமார், ச.விஜயகுமார், வே. ஜெயபாலகிருஷ்ணன், தலைவர் - க. சிவநேசன் (பாடசாலை அதிபர்), செயலாளர் - வி.மன்மதகுமார், பொருளாளர் - திருமதி சு. நிலாந்தினி (பாடசாலை ஆசிரியை), உப செயலாளர் - திருமதி ற. அனுஷியா, நிர்வாக உறுப்பினர்கள் - வே.சிவநேசன், செ. வேலுப்பிள்ளை, சி. சத்தியவரதன், ஆ. இளங்கோ, த. சாந்தநேசன். (ஐ-02)

## அநுரவின் இந்திய பயணம்:
# சஜித் தரப்பினரை கேலி செய்தாராம் ஜனாதிபதி

கொழும்பு, பெப். 12

ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) கட்சியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்கவின் இந்தியப் பயணம் தொடர்பாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர்களை அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க கிண்டலடித்துள்ளார் என்று தென்னிலங்கை தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) கட்சியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க மற்றும் ஏனையவர்களின் இந்திய பயணத்தின் நோக்கம் என்ன? அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் கேள்வி எழுப்பினார்.

"தேர்தல் நெருங்கும் போது, இந்தியா இது போன்ற செயல்களை மேற்கொள்வது வழமை. ஆனால், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர்கள் இந்தப் பயணத்தைப் பற்றி அதிகம் கவலைப்படுகின்றனர்" என்று தனது வழக்கமான புன்னகையுடன் ரணில் விக்கிரமசிங்க கூறினாராம். (ஐ)

# கோயில்களில் பணத்தை...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

புத்தர் ஆட்சி நடந்து கொண்டிருக்கும் காலத்தில்,

2019 திருக்கேதீச்சர வளைவை இந்துக்களின் புனித நாளான மகா சிவராத்திரி அன்று கிறித்தவர் வெட்டிச் சாய்த்ததை, அடித்து உடைத்ததைக் கண்டும் கேட்டும் உணர்ந்தும் யாழ்ப்பாண மக்கள் விரக்தியில் இருக்கிறார்களே! நோயல் நடேசன் காணவில்லையா?

புலம்பெயர் தமிழர் பணத் தொகைகளைக் கோயிலில் கொட்டுகிறார்களாம். இதனால் யாழ்ப்பாண மக்கள் விரக்தி அடைந்துள்ளார்களாம். கண் டேன் நான் என்கிறார் நோயல் நடேசன்.

அந்த வரிகளை அப்படியே வெளியிடுகிறார் ஈழநாடு ஆசிரியர்.

கோயில் கட்டுவதும் விழாக்கள் நடத்துவதும் தொடர்பாக அருட்தந்தை இமானுவேல், எழுத்தாளர் நோயல் நடேசன் போன்ற பல கிறித்தவர்கள் மீட்டும் மீட்டும் சொல்வதை ஊடகங்கள் வெளியிடுகின்றன.

வட மாகாணத்தில் போருக்குப் பின் கட்டிய புதிய புத்த கோயில்களின் எண்ணிக்கையை விடப் பன்மடங்கு எண்ணிக் கையில் கிறித்தவ தேவாலயங் கள் புதிதாக எழுந்துள்ளதை அமைந்துள்ளதை ஊடகங்களுக்குச் சிவ சேனை சொன்னாலும் ஊடகங்கள் வெளியிடமாட்டார்கள்.

சூரியன் மறைந்த பின்பும் வானத்தில் செவ்வானம் போல் அருட்தந்தை இம்மானுவேலும் எழுத்தாளர் நோயல் நடேசனும் கிறித்தவ மேலாதிக்க உணர்வுடன்.

கிறித்தவ ஆட்சிக் கால மேலாதிக்கத்தை ஏற்ற அதே உணர்வுடன் ஊடகங்கள்.

இலங்கையில் புத்தக கத்தோலிக்க கிறித்தவ மேலாதிக்கத்தை மீறி,

பல்லாயிரம் ஆண்டுகளாகச் சைவ சமயம் வெட்ட வெட்ட முளைத்திடும் ஆலைப் போல் அறுகம்புல் போல் ஆழ வேரோடி அகல வேரோடி,

அழிக்க அழிக்க மீண்டும் எழும் பீனிக்ஸ் பறவை போல் தொடர்ந்து வாழ்கிறது.

இதனால் விரக்தி அடைபவர்கள் அருட்தந்தை இமானுவேலும் எழுத்தாளர் நோயல் நடேசனும், ஒத்த கருத்துள்ள ஆபிரகாமிய புத்த மதத்தவருமே, யாழ்ப்பாணத்து மக்கள் அல்லர்.

# இன்னும் ஒன்றரை மாதத்தில் போதைப்பொருளற்ற நாடு!

## பொலிஸ் மா அதிபர் தேசபந்து



**கொழும்பு, பெப். 12**
**போதைப்பொருள் அற்ற நாட்டை இன்னும் ஒன்றரை மாதத்துக்குள் உருவாக்குவோம். எதிர்காலத்தில் போதைப் பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டால் அவரின் அனைத்து சொத்துகளையும் அரசு உடைமையாக்கு வோம் என்று பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

போதைப்பொருள் அற்ற நிலையை இன்னும் ஒன்றரை மாதத்துக்குள் உருவாக்குவோம். போதைப்பொருளுடன் ஒருவர் அகப்பட்டதும் அவரை கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்தி இரண்டு மாதங்கள் சிறையில் வைத்திருந்து வெளியில் அனுப்பும் முறைமைக்கு பதிலாக போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டு, அதன் மூலம் உழைத்த அவரது அனைத்து சொத்துகளையும் அரசுடைமையாக்கும் முறையை நடைமுறைப்படுத்தவுள்ளோம்.

'யுக்திய' நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ள இந்தக் காலப்பகுதிக்குள் போதைப் பொருளால் சம்பாதிக்கப்பட்ட 72.6 கோடி ரூபாய் பெறுமதியான சொத்துகளை சட்டத்தின் கீழ் - பொலிஸாரின் பொறுப்பின் கீழ் கொண்டு வந்து, அவற்றை அரசுடைமையாக்கும் நடவடிக்கையையும் முன்னெடுத்துள்ளோம்.

இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்கும்போது எனக்கும், அமைச்சருக்கும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும், பொலிஸ் அதிகாரிகளுக்கும் உயிர் அச்சுறுத்தல் விடுக்கின்றனர். நாட்டு மக்கள் பொலிஸாரை உற்சாகப்படுத்த வேண்டும்.

பிழைகள் செய்கின்ற மற்றும் குறைபாடுகள் உள்ள பொலிஸ் உத்தியோகத்தர்கள் காணப்படலாம். இது தொடர்பில் விலகியிருந்தால் அல்லது கற்களை வீசினால், பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை என்றால் குற்றவாளிகள் அதனை பயன்படுத்திக்கொள்வார்கள் - என்றார். (ஐ)

# கம்பளையில் மரம் விழுந்ததில் காயமடைந்த மாணவன் மரணம்!

கொழும்பு, பெப். 12
கம்பளையில் சர்வதேச பாடசாலையொன்றின் மாணவர்கள் குழு மீது மரம் முறிந்து விழுந்ததில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த மற்றொரு மாணவன் நேற்று காலை உயிரிழந்தார்.

கம்பளையை சேர்ந்த இக்ரம் ஹையானின் (வயது 5) என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்தார்.

மரம் முறிந்து வீழ்ந்ததில் காயமடைந்து கண்டி தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே இவர் உயிரிழந்தார்.

கடந்த திங்கட்கிழமை கம்பளையில் உள்ள சர்வதேச பாடசாலை ஒன்றில் மரம் முறிந்து விழுந்ததில் ஐந்து வயது மாணவர் ஒருவர் உயிரிழந்தார். மேலும் இரு மாணவர்கள் காயமடைந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தகராறால் ஒருவர் அடித்து கொலை!

கொழும்பு, பெப். 12
தனிப்பட்ட தகராறு காரணமாக ஒருவர் கட்டையால் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை சிறிபாகம - தெற்கு மெல்கல்ல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

மல்வத்தை - இலுக்வத்தை பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்.

தாக்குதல் நடத்திய 30 வயதுடைய நபர் அதே பகுதியைச் சேர்ந்தவர் எனவும் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சிறிபாகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# பம்பலப்பிட்டியில் இரு பஸ்கள் விபத்து!

கொழும்பு, பெப். 12
பம்பலப்பிட்டி டுப்ளிகேஷன் வீதியில் உள்ள பாடசாலை ஒன்றுக்கு அருகில் இரண்டு பஸ்கள் மோதி விபத்துக்குள்ளாகின. இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து அளுத்கம நோக்கிப் பயணித்த பஸ் ஸும் கொழும்பிலிருந்து கல்கிசை நோக்கிச் சென்ற பஸ் ஸும் மோதியே விபத்துக்குள்ளாகின.

வீதிக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறி ஒன்றை திடீரென வீதிக்குச் செலுத்தியதன் காரணமாகவே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

விபத்தில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை. மேலதிக விசாரணைகளை பம்பலப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# சாதாரண தர பரீட்சை; அறிவித்தல் விரைவில்!

கொழும்பு, பெப். 12
மே மாதம் நடைபெறவிருந்த க.பொ.த சாதாரண தரப் பரீட்சை தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

க.பொ.த உயர்தரப் பரீட்சை 2022 (2023)க்கான விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் பணிகள் ஏற்கனவே இடம்பெற்று வருகின்றன.

விடைத்தாள்களை மதிப்பீடு செய்வதற்காக விடைத்தாள் திருத்துவோருக்கு வழங்கப்படும் ரூ.1,450 உதவித் தொகையை உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

2023 (2024) க.பொ.த (உ/த) பரீட்சையின் பிரதான கண்காணிப்பாளர்கள், இணை கண்காணிப்பாளர்கள், தலைமை மேற்பார்வையாளர்கள் மற்றும் மேலதிக பிரதான மேற்பார்வையாளர்கள் ஆகியோருக்கும் 2022 (2023) க.பொ.த (உ/த) பரீட்சைக்கான திருத்தப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# சிறுவர் துஷ்பிரயோகமா? 1929இற்கு அறிவியுங்கள்

கொழும்பு, பெப். 12
சிறுவர் துஷ்பிரயோகம் இடம்பெற்றால் 1929 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அறிவிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு (2023) சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் ஏனைய குற்றங்கள் தொடர்பாக 11ஆயிரத் 414 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் உதயகுமார அமரசிங்க தெரிவித்தார்.

1929 சிறுவர் உதவி இலக்கம், ஜனாதிபதி செயலகம் மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை ஆகியவற்றின் ஊடாக இது தொடர்பான முறைப்பாடுகள் மின்னஞ்சல்கள் மூலம் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் அவர் கூறினார்.

2023ஆம் ஆண்டு நாட்டின் 25 மாவட்டங்களிலிருந்தும் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு இந்த முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. மேல் மாகாணத்தில் இருந்து அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன அவர் கூறினார்.

சிறுவர்கள் மற்றும் பெரியவர்கள் சிறுவர்களுக்கு ஏதேனும் துஷ்பிரயோகம் அல்லது வன்முறை இருந்தால் 1929 சிறுவர் உதவி எண்ணுக்கு தெரிவிக்குமாறு தலைவர் கேட்டுக் கொள்கிறார். (ஐ)

பொறியியலாளர் கொலை:

# மரண தண்டனை பெற்ற பெண் 33 வருடங்களின் பின்னர் கைது!

கொழும்பு, பெப். 12
இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர் ஒருவரைக் கொலை செய்த குற்றச்சாட்டில் உயர் நீதிமன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்ட பெண் ஒருவர் 33 வருடங்களின் பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார்.

களுத்துறை - பண்டாரகம பிரதேச வீடு ஒன்றில் மறைந்திருந்த நிலையில் கைது செய்யப்பட்டதாக கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்ற விசாரணைப் பிரிவு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட பெண், கொலை செய்யப்பட்ட பொறியியலாளர் பணியாற்றிய பணிமனையில் ஆங்கில மொழி தட்டெழுத்தாளராக கடமையாற்றியவராவார்.

1989ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13ஆம் திகதி வீடு ஒன்றுக்கு பொறியியலாளரை அழைத்துச் சென்று கொலை செய்தார் என்று இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டு குற்றம் நிரூபிக்கப்பட்டிருந்தது. (ஐ)

## தேரர் சுட்டுக்கொலை மேலும் இருவர் கைது!

கொழும்பு, பெப். 12
விகாரையில் வைத்து கலப்பலுவாவே தம்மரத்தன தேரர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மேல் மாகாண வடக்கு குற்றப்பிரிவு தெரிவித்துள்ளது.

கைதான சந்தேக நபர்களில் ஒருவரிடமிருந்து போதைப் பொருள், மூன்று ரி - தோட்டாக்கள், வாள் மற்றும் இரண்டு கைபேசிகள், சுகாதார ஆடைகள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

தேரர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## பூஸா சிறையிலிருந்து கைபேசிகள் கைப்பற்றல்!

கொழும்பு, பெப். 12
பூஸா உயர் பாதுகாப்பு சிறைச்சாலையின் ஏ மற்றும் டி பிரிவுகளில் நுட்பமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கைபேசிகள் உட்பட பல உபகரணங்களை விசேட அதிரடிப் படையினர் கண்டுபிடித்துள்ளனர்.

ஸ்மார்ட் கைபேசி, சிறிய கைபேசிகள், சிம் அட்டைகள், மெமரி சிப்கள், தொலைபேசி சார்ஜர்கள் அகற்றப்பட்ட வெளிப்புற அட்டைகள், டேட்டா கேபிள்கள் ஆகியன நிலத்துக்குள் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் அதிரடிப் படையினரால் கண்டுபிடிக்கப்பட்டன. (ஐ)

# ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கு பதிலாகத் தேர்தலை நடத்துங்கள்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

கொழும்பு, பெப். 12

**ஜனாதிபதித் தேர்தல் முறையை நீக்குவதற்குப் பதில் உரிய திகதியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.**

அம்பாந்தோட்டையில் நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்வு ஒன்றில் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்கப் போவதாக அரசாங்கம் கூறிக் கொண்டிருக்கின்றது. ஆனால், மக்கள் எதிர்பார்க்கும் ஜனாதிபதித் தேர்தல் வாக்கெடுப்பின் பின்னரே அதனை இல்லாதொழிக்க வேண்டும். அதற்காக உரிய திகதியில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும் - என்றார். (ஐ)



# மோட்டார் சைக்கிள் மரத்துடன் மோதி கான்ஸ்டபிள் மரணம்!

## புத்தளத்தில் சம்பவம்

சிலாபம், பெப். 12

புத்தளம், பல்லம நந்திமித்ர பாடசாலைக்கு அருகில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்தார்.

ரிதிபென்திஎல்ல, 2 ஆம் கட்டை பகுதியை சேர்ந்த 22 வயதுடைய சிலாபம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே இந்த விபத்தில் உயிரிழந்தார்.

சிலாபம் பகுதியில் இருந்து ஆனமடுவ பகுதியை நோக்கிப் பயணம் செய்த மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மரமொன்றில் மோதியதில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த குறித்த பொலிஸ் கான்ஸ்டபிளை அங்கிருந்தவர்கள் உடனடியாக சிலாபம் மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். எனினும், அவர் அங்கு உயிரிழந்தார். (ஐ)

# நிஷாந்தவின் இறுதிக் கிரியையில் சமையல் பணியில் இராணுவத்தினர்!

கொழும்பு, பெப். 12

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் இறுதிக்கிரியைகளின்போது உணவு சமைப்பதற்காக இலங்கை இராணுவத்தின் உதவி பெறப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பில் இராணுவத்தின் ஊடகப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் ரசிக குமார தெரிவிக்கையில்,

உணவு சமைப்பதற்கு இராணுவத்தினர் அனுப்பப்பட்டனர். சமையல் பொருட்கள் வழங்கப்படவில்லை என்றார்.

சமையலுக்கு உதவி தேவைப்பட்டதன் அடிப்படையில் இராணுவத்தினர் அனுப்பப்பட்டனர். முன்னாள் இராஜாங்க அமைச்சரின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் உறவினர்களால் தேவையான பொருட்கள் வழங்கப்பட்டன என்றும் அவர் கூறினார். (ஐ)

# பொறுப்பேற்கப்படாத மருந்துகள் பாதுகாப்பற்ற கொள்கலன்களில்!

கொழும்பு, பெப். 12

பல மில்லியன் டொலர் செலவில் இறக்குமதி செய்யப்படும் மருந்துகள் பாதுகாப்பற்ற நிலையில் கொள்கலன் முனையங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன என்று மருத்துவ மற்றும் சிவில் உரிமைகள் மருத்துவ சங்கத்தின் தலைவர் மருத்துவர் சமல் சஞ்சிவ தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சின் மருத்துவ விநியோகப் பிரிவின் வினைத்திறன் இன்மையினால் இந்த நிலைமை மோசமாகியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரச மருந்தக கூட்டுத்தாபனத்தால் கடந்த செப்ரெம்பர் மாதம் வெளிநாட்டு நிறுவனங்கள் ஊடாக இந்த மருந்துகள் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. தற்போது வெலிசர, வத்தளை மற்றும் களனி பிரதேசங்களில் உள்ள கொள்கலன் முனையங்களில் இந்த மருந்துகள் களஞ்சியப் படுத்தி வைக்கப்பட்டுள்ளன.

மெரோபெனம் போன்ற பலமான நுண்ணுயிர் எதிர்ப்பிகள் உட்பட பெருமளவான மருந்துகள் இங்கு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த விடயம் தொடர்பில் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையிடம் சுகாதார அமைச்சு வினவியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே, கொள்கலன் முனையங்களில் பாதுகாப்பற்ற முறையில் மருந்துகளை களஞ்சியப்படுத்துவது குறித்து தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை விசாரணை நடத்திவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# சீதையம்மன் கோவிலில் நேற்று பாலஸ்தாபனம்!

நுவரெலியா, பெப். 12

நுவரெலியா சீத்தாஎலிய வனத்தில் உள்ள சீதையம்மன் ஆலயத்தில் எதிர்வரும் மே மாதம் 19 ஆம் திகதி மஹா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. இதற்கான பாலஸ்தாபன விசேட பூசை நேற்று ஞாயிற்றுகிழமை காலை நடைபெற்றது. யாகபூசை இடம்பெற்று பின் பாலஸ்தாபனம் செய்யப்பட்ட தெய்வங்களுக்கு விசேட அபிசேகங்களை ஆலய பிரதம குருக்கள் தலைமையில் நடத்தி வைக்கப்பட்டது.

இதனையடுத்து இந்த நிகழ்வுகளில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு மகேஸ்வர பூசையும் நடத்தப்பட்டது. (ஐ)

# சுற்றுலா வந்த ஆஸி. பெண்ணை வன்புணர முயன்றதாக முறைப்பாடு!

கொழும்பு, பெப். 12

மசாஜ் நிலையத்துக்கு சென்ற அவுஸ்திரேலிய பெண் ஒருவரை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்த முயன்றவர் தொடர்பில் நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து கண்டிக்கு செல்லும் வீதியில் கடுகண்ணாவை பிரதேசத்தில் இயங்கும் மசாஜ் நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தனக்கு நேர்ந்த சம்பவம் குறித்து அவுஸ்திரேலியா பிரஜையான 39 வயதுடைய பெண் தனது பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவித்தவை வருமாறு,

எனது கணவர் மற்றும் குழந்தையுடன் சுற்றுலா நிமிர்த்தம் கடந்த ஜனவரி மாதம் 29 ஆம் திகதி இலங்கைக்கு வந்தோம் அதிகமான சுற்றுலா இடங்களைப் பார்வையிட்டு கடந்த 9ஆம் திகதி கடுகண்ணாவை பிரதேசத்தில் ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்தோம். அதே நாள் மாலை குறித்த ஹோட்டலில் மசாஜ் செய்துகொள்ள மசாஜ் நிலையம் சென்றேன். மசாஜ் செய்தவருக்கு தலை, தோள் மசாஜ் செய்யவே கூறினேன். அனுமதியின்றி அவர் அந்தரங்க பகுதிகளை தொட்டார். இதனால், நான் உடனடியாக அங்கிருந்து வெளியேறி, உடனடியாக நுவரெலியா வந்தோம்.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

# 60,122 சுற்றுலா பயணிகள் 8 நாட்களில் வருகைதந்தனர்!

கொழும்பு, பெப். 12

இந்த மாதத்தின் முதல் 8 நாட்களில் 60 ஆயிரத்து 122 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை வந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி இந்த ஆண்டு இதுவரை 2 இலட்சத்து 68 ஆயிரத்து 375 சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மேலும் சுற்றுலாப் பயணிகளில் அதிகளவானோர் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளனர். 42 ஆயிரத்து 768 பேர் அங்கிருந்து வந்தனர்.

அத்துடன், ரஷ்யாவில் இருந்து 39 ஆயிரத்து 914 சுற்றுலா பயணிகளும், பிரித்தானியாவில் இருந்து 22 ஆயிரத்து 278 சுற்றுலா பயணிகளும், ஜேர்மனியில் இருந்து 18 ஆயிரத்து 16 சுற்றுலா பயணிகளும் வருகை தந்துள்ளனர். (ஐ)

# கழுத்தில் கயிறு இறுகி சிறுவன் உயிரிழப்பு!

நுவரெலியா, பெப். 12

சவுக்கு மரத்தில் கயிறு கட்டி விளையாடி கொண்டிருந்த சிறுவன் கயிறு இறுகி உயிரிழந்தார்.

நுவரெலியா - மாகாஸ் தோட்ட பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சிவகுமார் டிலக்சன் (வயது 12) என்ற சிறுவனே உயிரிழந்தார்.

சிறுவன் தனியாக வீட்டில் இருந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சிறுவனின் அழுகை சத்தம் கேட்டு அயலவர்கள் அவரை மீட்டனர்.

அவசர உதவிக்கு 1990 அம்புலன்ஸ் அழைக்கப்பட்டது. அதில் வந்த முதலுதவியாளர்கள் சிறுவனை பரிசோதித்தபோது சிறுவன் உயிரிழந்தமை தெரிய வந்தது.

நுவரெலியா மருத்துவமனையில் சிறுவனின் சடலம் ஒப்படைக்கப்பட்டது. (ஐ)

# நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பது தொடர்பில் உரையாடல்!

கொழும்பு, பெப். 12

ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படுவதற்கு முன்னர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டு வருகின்றது.

இது தொடர்பில் தென்னிலங்கை தரப்புகள் தெரிவித்த விடயங்கள் வருமாறு,

நிறைவேற்றதிகார முறைமையை ஒழிக்க பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கினரின் அனுமதியைப் பெறுவது பிரச்னையல்ல. சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டு பெரும்பான்மை மக்களின் சம்மதம் பெறப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை கொண்டுள்ளார்.

எதிர்வரும் மார்ச் மாதம் வரை நாட்டில் ஓரளவு உறுதித் தன்மை கட்டியெழுப்பப்படும். அதன் பின்னரே சமூக உரையாடலை ஆரம்பிக்க வேண்டும் என்று ஆலோசிக்கப்பட்டுள்ளது.

பல ஜனாதிபதி தேர்தல்களில் நிறைவேற்று ஜனாதிபதி பதவி ஒழிப்பு தொடர்பில் கட்சிகள் வாக்குறுதிகளை அளித்துள்ளன. இதனை எதிர்க்கும் திறன் அவர்களுக்கு இல்லை.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி தேர்தல் முறை ஒழிக்கப்பட்டு ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படுமா? இல்லையேல் ஜனாதிபதி தேர்தலின் பின்னர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவி ஒழிக்கப்படுமா என்பதில் நிச்சயமற்ற நிலை உள்ளது. எவ்வாறாயினும், இதுவே கடைசி ஜனாதிபதி தேர்தலாக இருக்க வேண்டும் - என்றும் அந்தத் தகவல்கள் தெரிவித்தன. (ஐ)

**குமாரபுரம் படுகொலை:**

# 28ஆவது ஆண்டு நினைவுநாள் நேற்று நினைவேந்தப்பட்டது!




**திருகோணமலை, பெப். 12**

**குமாரபுரம் படுகொலையின் 28ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று ஞாயிற்றுக்கிழமை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.**

*படுகொலை இடம்பெற்ற குமாரபுரத்தில் நடந்த இந்த நிகழ்வில், பொதுமக்கள் உயிரிழந்தவர்களின் புகைப்படங்களுக்கு மலர் தூவி, விளக்கேற்றி அஞ்சலி செலுத்தினர்.*

*நினைவேந்தலில் அகம் மனிதாபிமான வள நிலையத்தின் இணைப்பாளர் க. லவகுசராசா, தவத்திரு வேலன் சுவாமிகள் உட்பட பொது மக்கள் பலர் கலந்துகொண்டனர்.*

*திருகோணமலை - கிளிவெட்டி - குமாரபுரத்தில் 1996 பெப்ரவரி 11ஆம் திகதி நுழைந்த இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு நடத்தியும் வாளால் வெட்டியும் பெண்கள், சிறுவர்கள் உட்பட 26 பேரை கொன்றனர்.*

*இதன்போது, 15 வயது சிறுமி பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டமையும் இடம்பெற்றது.*

*இந்தப் படுகொலை தொடர்பான வழக்கில் 8 இராணுவத்தினர் சாட்சியாளர்களால் அடையாளம் காட்டப்பட்டனர். ஆரம்பத்தில் மூதூர் நீதிமன்றில் நடந்த இந்த வழக்கு பின்னர் திருகோணமலை மேல் நீதிமன்றத்துக்கும், தொடர்ந்து அநுராதபுரம் மேல் நீதிமன்றுக்கும் மாற்றப்பட்டன. இந்தப் படுகொலை நடந்து 20 வருடங்களின் பின்னர் 2016ஆம் ஆண்டு குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் எஞ்சியிருந்த 6 இராணுவத்தினர் விடுதலை செய்யப்பட்டனர்.*

*எனினும், பாதிக்கப்பட்ட மக்கள் தமது உறவுகளுக்கு நீதி வேண்டி தொடர்ந்து போராடி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)*

# சாய்ந்தமருதில் கடும் காற்றால் இரண்டாக உடைந்தது படகு!

*சாய்ந்தமருது, பெப். 12*

*கடும் காற்றால் ஏற்பட்ட அலையால் இரண்டாக உடைந்த நிலையில் படகொன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை மீட்கப்பட்டு சாய்ந்தமருது கடற்கரைப் பகுதியில் கரைக்கு இழுத்துவரப்பட்டுள்ளது.*

*இந்தப் படகு, கடற்கரையில் நங்கூரமிட்ட நிலையில் நிறுத்தப்பட்ட போதிலும், அப்பகுதியில் வீசிய பலத்த காற்றால் படகு இரண்டாக உடைந்து இயந்திரமும் கடலில் விழுந்து காணாமல் போயுள்ளது.*

*இந்த நிலையில் படகின் பாகங்கள் நேற்று கனரக வாகனத்தின் உதவியுடன் கரைக்கு இழுத்து வரப்பட்டது.*

*இதேவேளை, படகு உடைந்த கடுமையான கடலரிப்பு இடம்பெறுவதுடன் படகுகளை நிறுத்தி வைக்கக்கூடிய இறங்குதுறையின்றி மீனவர்கள் கடும் சிரமங்களை எதிர்கொள்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)*

# பட்டிப்பளையில் இறால் பண்ணை அமைப்பது குறித்து கலந்துரையாடல்

*மட்டக்களப்பு, பெப். 12*

*மண்முனை தென்மேற்கு - பட்டிப்பளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதியில் இறால் பண்ணைகளை அமைப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான அறிவுறுத்தல் வழங்கும் கூட்டம் நேற்று முன்தினம் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையில் நடைபெற்றது.*

*பட்டிப்பளை பிரதேச செயலகத்தில் கூட்டம் நடைபெற்றது.*

*தெரிவு செய்யப்பட்ட 40 பயனாளிகளுக்கு இடையில் ஒரு சங்கத்தை அமைக்க வேண்டும் எனவும், இங்கு வழங்கப்படுகின்ற நிலத்தைப் பயன்படுத்தி இறால் உற்பத்தியை செய்வதற்கு உரிய தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குவது தொடர்பிலும் அறிவுறுத்தப்பட்டன.*

*இறால் பண்ணைகளை அமைப்பதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளுக்கு கிழக்கு மாகாண சபை நிதியுதவி வழங்கவும் முடிவு செய்யப்பட்டது. (ஐ)*

# விழிப்புணர்வு சித்திரப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள்



*மட்டக்களப்பு, பெப். 12*

*இயற்கையை நேசிப்போம் பிளாஸ்ரிக்கை எதிர்ப்போம் எனும் தொனிப்பொருளில் பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்ட சித்தரப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.*

*வை எம் சி ஏ நிறுவனம் சுற்று சூழலை பாதுகாக்கும் செயல் திட்டத்தின் கீழ் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பாவனையை தவிர்க்கும் வகையில் விழிப்புணர்வு செயல் திட்டங்களை முன்னெடுத்தது.*

*இதன் ஓர் அங்கமாக, பாடசாலை மாணவர்கள் மத்தியில் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பாவனையை தவிர்க்கும் வகையில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன்*

*இயற்கையை நேசிப்போம் பிளாஸ்ரிக்கை எதிர்ப்போம் எனும் தொனிப்பொருளில் சித்திரப் போட்டி நடந்ததது. இதில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. (ஐ)*

# வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட 250 குடும்பங்களுக்கு நிவாரணம்!

*மட்டக்களப்பு, பெப். 12*

*பாலமீன்மடு - திராய்மடு மீனவர் சங்கத்தின் ஏற்பாட்டில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட 250 குடும்பங்களுக்கு உலருணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.*

*சங்கத்தின் தலைவர் வி. மனோகரன் தலைமையில் நடந்த நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்ரினா முரளிதரன் பிரதம அதிதியாக கலந்கொண்டார்.*

*மீனவர் கூட்டுறவு சங்கத்தின் நிதி அனுசரணையில் சுமார் 7 இலட்சம் ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் இந்தக் குடும்பங்களுக்கு பகிரப்பட்டன.*

*இதன்போது, முகத்துவாரத்தை ஆழப்படுத்தித் தருமாறு மீனவர்கள் அரச அதிபருக்கு கோரிக்கை மனு ஒன்றையும் அளித்தனர். (ஐ)*

# புனித லூர்து அன்னை ஆலயத்தில் சிறப்பாக நடந்தது கொடியிறக்கம்

*மட்டக்களப்பு, பெப். 12*

*மட்டக்களப்பு மாவட்டத்தின் மிகவும் பழமையான தேவாலயங்களுள் ஒன்றான பெரிய உப்போடை புனித லூர்த்து அன்னை ஆலயத்தின் வருடாந்த பெருவிழா நேற்றுமுன்தினம் மாலை திருவிழா கூட்டுத்திருப்பலி நடைபெற்று கொடியிறக்கத்துடன் நிறைவுபெற்றது.*

*கடந்த 02ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான ஆலயத்தின் திருவிழாவில் தினமும் விசேட திருப்பலி பூசைகள் நடைபெற்றுவந்ததுடன் நேற்றைய தினம் மாலை திருச்சொரூப பவனி நடைபெற்றது.*



*ஆலயத்தின் பங்குத்தந்தை பிறைனர் செலர் தலைமையில் மட்டக்களப்பு -அம்பாறை மறை மாவட்டங்களுக்கான ஆயர் பொன்னையா ஜோசப் ஆண்டகை தலைமையில் திருவிழா திருப்பலி விசேட பூசைகள் நடைபெற்றன.*

*இந்த திருவிழா திருப்பலி பூஜையில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.*

*இதன்போது நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் ஆசி வேண்டி விசேட பிரார்த்தனைகளும் முன்னெடுக்கப்பட்டதுடன் பூஜையில் கலந்துகொண்டவர்களுக்கு அருட்சாதனம் வழங்கும் நிகழ்வும் ஆயரால் நடத்தப்பட்டது. (ஐ)*

# நிர்ணயவிலை தாமத்தால் விவசாயிகளுக்கு நட்டம்!

*மட்டக்களப்பு, பெப். 12*

*மட்டக்களப்பு மாவட்டத்தில் 95 வீதமான அறுடை நிறைவடைந்த பின்னர் நெல்லுக்கு நிர்ணய விலை கொண்டுவரப்பட்டதால் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.*

*அறுவடைகள் நீண்டநாட்களுக்கு முன்னர் ஆரம்பித்திருந்ததால், விவசாயிகள் மூடைக்கு சுமார் 2 ஆயிரத்து 500 ரூபாய் வீதம் நட்டம் அடைந்துள்ளனர். நிர்ணய விலையை முன்னரே அறிவித்திருந்தால் இந்த நட்டத்தைத் தவிர்த்திருக்க முடியும்.*

*மட்டு. ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் நடந்த ஊடக சந்திப்பிலேயே விவசாயிகள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.*

*வெள்ளப் பாதிப்பால் அறுவடையானது மிகவும் குறைந்தளவிலேயே இடம்பெற்றது. இதனால், நெல்லை தனியாருக்கு விற்கவேண்டிய நிலையேற்பட்டதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர். (ஐ)*

ஈழநாடு



# கூட்டணி அரசு அமைக்க நவாஸ் ஷெரீப் முயற்சி!

## பாகிஸ்தான் இராணுவம் ஆதரவு



இஸ்லாமாபாத், பெப். 12

**பாகிஸ்தான் பாராளுமன்ற தேர்தலில் எந்த கட்சிக்கும் அறுதி பெரும்பான்மை கிடைக்கவில்லை. இதையடுத்து, கூட்டணி ஆட்சி அமைக்க முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் முயற்சி மேற்கொண்டுள்ளார். இதற்கு பாகிஸ்தான் இராணுவம் ஆதரவு தெரிவித்துள்ளது.**

பாகிஸ்தானில் கடந்த 8ஆம் திகதி, பாராளுமன்றம் மற்றும் மாகாண சட்டப் பேரவைகளுக்கு தேர்தல் நடந்தது. பதிவான வாக்குகளை எண்ணும் பணி வெள்ளிக்கிழமை தொடங்கியது. முடிவில், முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் பாகிஸ்தான் தெக்ரீக்-இ-இன்சாஃப் கட்சி (பி. ரி. ஐ.) தேர்தலில் போட்டியிட தடை விதிக்கப்பட்டதால், அதன் தலைவர்கள் சுயேச்சை வேட்பாளர்களாக போட்டியிட்டனர்.

பி. ரி. ஐ. ஆதரவு பெற்ற சுயேச்சை வேட்பாளர்கள் 101 இடங்களில் வெற்றி பெற்றனர். முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக்-என் கட்சி (பி. எம். எல்.-என்) 73 இடங்களிலும், பிலாவல் பூட்டோ தலைமையிலான பாகிஸ்தான் மக்கள் கட்சி (பி. பி. பி.) 54 இடங்களிலும் வெற்றி பெற்றிருந்தன. முத்தாஹிடா குவாமி இயக்கம் (எம்க்யூஎம்) கட்சி 17 இடங்களிலும் மற்ற இடங்களில் சிறு கட்சிகளும் வென்றன.

பாகிஸ்தான் பாராளுமன்ற தேர்தலில் எந்த கட்சிக்கும் அறுதி பெரும்பான்மை இல்லாததால், அரசியல் கட்சிகள் கூட்டணி ஆட்சிக்கு முன்வர வேண்டும் என நவாஸ் ஷெரீப் அழைப்பு விடுத்தார்.

இதுகுறித்து பிலாவல் பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சியினருடன், நவாஸ் கட்சியினர் பேச்சு நடத்தி வருகின்றனர். நவாஸ் ஷெரீப்பின் இந்த முயற்சிக்கு பாகிஸ்தான் இராணுவத்தின் தலைமை தளபதி ஜெனரல் ஆஸிம் முனிர் ஆதரவு தெரிவித்துள்ளார்.

ஜனநாயக சக்திகள் அனைத்தும் ஒன்றிணைத்து ஆட்சி அமைக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார். (ஐ)

# அகதி முகாம்மீது இஸ்ரேல் தாக்குதல் 10 சிறுவர்கள் உட்பட 28 பேர் மரணம்!



டெல் அவிவ், பெப். 12

காசாவின் ரஃபா நகரத்தின் மீது இஸ்ரேல் இராணுவம் நடத்திய வான்வழித் தாக்குதலில்10 சிறுவர்கள் உட்பட 28 பேர் உயிரிழந்தனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இஸ்ரேல் - ஹமாஸ் போர் கடந்த ஒக்ரோபர் 7ஆம் திகதி ஆரம்பமானது. இதுவரை இந்தப் போரில் 28 ஆயிரத்துக்கும் அதிகமான அப்பாவி பலஸ்தீன பொதுமக்கள் பலியாகினர். இவர்களில் பெரும்பாலானோர் பெண்கள் மற்றும் சிறுவர்கள்.

காசாவில்இருந்து பெரும்பலான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்கள் ரஃபா நகரத்தில் முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர். இந்தப் பகுதியை இஸ்ரேல் தாக்கி வருகின்றது. இங்கு நேற்று முன்தினம் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலிலேயே 10 சிறுவர்கள் உட்பட 28 பேர் உயிரிழந்தனர். (ஐ)

# ஐ. நா. பணிமனையில் ஹமாஸின் சுரங்கம்!



ஜெருசலேம், பெப். 12

காசாவில் ஐ. நா. பணிமனையின் கீழ் ஹமாஸ் அமைப்பு சுரங்கம் அமைத்துள்ளது என காணொலி வெளியிட்டு இஸ்ரேல் இராணுவம் குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட காணொலியில் " ஐ. நா. பணிமனை அருகே அமைந்த இந்த சுரங்கத்திற்குள் பெரிய மின்கலன்களும் வைக்கப்பட் டுள்ளன. மின்சாரத்துக்காக தனி அறை அமைத்து, அதன் வழியே தேவையான இடங்களுக்கு மின்சாரம் கொண்டு செல்லப்படுவதும் தெரிந்தது. பயங்கரவாதிகள் இந்த கட்டமைப்பை பயன்படுத்தி வந் துள்ளனர்.

சுரங்க வாசல் மற்றொரு புறத்தில், ஐ. நா. வளாக பகுதிக்குள்ளேயே முடிகிறது. ஹமாஸ் அமைப்புக்கு ஆதரவாக ஐ. நா. பணியாளர்கள் செயல்படுகின்றனர் - இஸ்ரேல் சாடியுள்ளது. (ஐ)

# இந்திய வம்சாவளி தொழிலதிபர் அமெரிக்காவில் தாக்கிக் கொலை



வாஷிங்டன், பெப். 12

அமெரிக்காவில் தாக்கப்பட்ட இந்திய வம்சாவளி தொழிலதிபர் விவேக் தனேஜா உயிரிழந்தார்.


அமெரிக்காவின் வெர்ஜினியா மாகாணம், டன் லோரிங் நகரை தலைமையிடமாகக் கொண்டு டைனமோ ரெக்னோலஜிஸ் நிறுவனம் செயல்படுகிறது. இந்த நிறுவனத்தின் தலைவராக இந்திய வம்சாவளியை சேர்ந்த விவேக் தனேஜா ( 41 ) பதவி வகித்தார். இவர் நிறுவனத்தின் இணை நிறவுநர்களில் ஒருவராவார்.

கடந்த 2ஆம் திகதி அமெரிக்க தலை நகர் வாஷிங்டனில் உள்ள ஹோட்டலுக்கு விவேக் சென்றார். அங்கு அவருக்கும் மர்ம நபர் ஒருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

அப்போது மர்ம நபர் தாக்கியதில் விவேக்கின் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு மயங்கி விழுந்தார். ஹோட்டல் ஊழியர்கள் அவரை மீட்டு பொலிஸாரின் உதவியுடன் மருத்துவமனையில் சேர்த்தனர்.

கடந்த 7ஆம் திகதி அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். மர்ம நபரின் சி. சி. ரீ . விகாணொளியை பொலிஸார் வெளியிட்டுள்ளனர். அவர் குறித்து துப்பு கொடுப்போருக்கு சன்மானமும் அறிவித்துள்ளனர். (ஐ)

# 7 இலட்சம் தீக்குச்சிகளால் உருவான ஈபிள் கோபுரம்!



பாரிஸ், பெப். 12

முழுவதும் தீக்குச்சிகளால் வடிவமைக்கப்பட்ட உலகின் உயர்ந்த ஈபிள் கோபுரம் கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளது.

பிரான்ஸை சேர்ந்த ரிச்சாட் ப்லோட் என்பவரே இந்த உலக சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

7 இலட்சத்து 6 ஆயிரத்து 900 தீக்குச்சிகளையும் 2.3 கிலோ ஒட்டும் பசையையும் பயன்படுத்தி சுமார் 4ஆயிரத்து 200 மணித்தியாலங்கள் செலவு செய்து கடும் உழைப்பால் அவர் 7.19 மீற்றர்கள் உயரமான கோபுரத்தை அதன் அச்சு அசல் தோற்றத்தில் அப்படியே வடிவமைத்திருக்கிறார்.

கடந்த டிசெம்பரில் கோபுர வடிவமைப்பை நிறைவு செய்த அவர், அதனை உலக சாதனையாக நிறுவுமாறு கேட்டு கின்னஸ் உலக சாதனைக் குழுவுக்கு அறிவித்திருந்தார். இங்கிலாந்தில் உள்ள கின்னஸ் குழுவின் தீர்ப்பாளர்கள் கோபுரத்தைப் பரிசோதித்த பின்னர் அது பயன்பாட்டில் உள்ள சாதாரண தீக்குச்சிகளால் வடிவமைக்கப்படவில்லை எனத் தெரிவித்து அதனை உலக சாதனைப் புத்தகத்தில் பதிவதற்கு மறுத்திருந்தனர்.

தீப்பற்றும் மருந்துத் தலைகள் இல்லாத குச்சிகளைக் கொண்டு கோபுரம் வடிவமைக்கப்பட் டிருந்தமையே அதற்குக் காரணமாகும்.

சாதனையாளர் ரிச்சாட் ப்லோட் தீக்குச்சிகளைத் தீப்பெட்டி தயாரிப்பாளர்களிடம் இருந்து மொத்தமாகக் கொள்வனவு செய்திருந்தார். கோபுரத்தை வடிவமைப்பதற்காக வெடிமருந்துத் தலைகள் இல்லாத குச்சிகளை நேரடியாக வாங்கியதை அவர் கின்னஸ் குழுவினருக்குத் தெளிவுபடுத்தியிருந்தார். அதன் பிறகே அவரது சாதனையைக் கின்னஸ் குழு ஏற்றுக் கொண்டது. உலகில் தீக் குச்சிகளால் வடிவமைக்கப்பட்ட மிக உயர்ந்த ஈபிள் கோபுரம் அது என்பது கின்னஸ் புத்தகத்தில் இப்போது பதிவுசெய்யப்பட்டுளளது. (ஐ)

# சீனாவுடனான கடினமான சூழ்நிலையை கடந்துவிட்டோம்!

## இந்திய வெளிவிவகார அமைச்சர்

பேர்த், பெப். 12

"சீனாவுடன் கடினமான சூழ்நிலையை நாங்கள் கடந்து விட்டோம்" என்று அவுஸ்திரேலியாவில் நடந்த நிகழ்ச்சியில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவில் பேர்த்தில் என்ற இடத்தில் இந்தியர்கள் மத்தியில், ஜெய்சங்கர் பேசியவை வருமாறு,

கோவிட் காலத்திலும் இந்திய இராணுவத்தினர் தங்களது பணியை சிறப்பாக செய்தனர். பல்வேறு சவால்களை எதிர்கொண்டனர். சீனாவுடன் கடினமான சூழ்நிலையை நாங்கள் கடந்துவிட்டோம். அனைவருக்கும் தெரியும். 370வது சிறப்பு பிரிவு இரத்து செய்யப்பட்டது. உக்ரைன் மோதலின்போது நாங்கள் அழுத்தத்துக்கு ஆளானோம்.

கடந்த 10 ஆண்டுகளில், ஒவ்வொரு ஆண்டும் 8 புதிய விமான நிலையங்களை நாங்கள் கட்டியுள்ளோம். ஒவ்வொரு நாளும் 30 கி.மீ தூரம் தேசிய நெடுஞ்சாலைகள் போடப்படுகின்றன. ஒவ்வொரு நாளும் 2 புதிய கல்லூரிகள் திறக்கப்படுகின்றன. ஒவ்வொரு வளர்ந்த நாட்டிலும் பின் தங்கிய மக்கள் உள்ளனர் - என்றார். (ஐ)

# மாற்றங்கள் நிகழவேண்டும் என்றால் சர்வதேச சமூகத்தின் உதவி அவசியம்!

## நாடு திரும்பிய அநுரகுமார தெரிவிப்பு

கொழும்பு, பெப். 12

**இலங்கை எதிர்பார்க்கும் மாற்றங்கள் நிகழவேண்டும் என்றால் சர்வதேச சமூகத்தின் உதவி அவசியம் என ஜே. வி. பியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.**

இந்திய பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய வேளை செய்தியாளர்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கை இனிமேலும் ஒரு தனிமைப்பட்ட நாடாக செயல்படமுடியாது. நாடு எதிர்பார்க்கும் மாற்றங்களை அடைவதற்கான சர்வதேச ஆதரவை பெறுவதே இந்தப் பயணத்தின் நோக்கம்.

பிராந்தியத்தில் மிகவேகமாக வளர்ச்சியடைந்து வரும் நாடு இந்தியா தகவல் தொழில்நுட்ப துறையில் அந்த நாடு மிகுந்த நிபுணத்துவம் கொண்டதாக காணப்படுகின்றது இலங்கை அதன் ஆதரவை பெறலாம்.

76 வருட பேரழிவு அரசியல் கலாசாரத்தை நாங்கள் நிறுத்த வேண்டும். மக்கள் பெரும் எதிர்பார்ப்பை கொண்டுள்ளனர். அந்த மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான விழிப்புணர்ச்சி அவர்கள் மத்தியில் தற்போது காணப்படுகின்றது.

அந்த எதிர்பார்ப்புக்கு தலைமைத்துவம் வழங்குவதும் நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதுமே எங்களின் நோக்கம். எங்களுக்கு அதற்கான சர்வதேச ஆதரவு அவசியம். நாங்கள் அபிவிருத்தியடைந்த நாடோ அல்லது தொழில்நுட்ப திறன் உள்ள நாடோ இல்லை - என்றும் அவர் கூறினார். (ஐ)



# தற்போதைய எம். பிக்கள் எவருடனும் கூட்டு இல்லை!

## ஜனக ரத்நாயக்க தெரிவிப்பு



கொழும்பு, பெப். 12

பாராளுமன்றத்தில் உள்ள 225 உறுப்பினர்களில் எவரையும் இணைத்து கொண்டு அரசியல் கூட்டணி அமைப்பதில்லை என்று பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தாமும், ஒன்றிணைந்த சிவில் அமைப்புகளின் கூட்டமைப்பும் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய சிவில் அமைப்பு முன்னணியுடன் நேற்றுமுன்தினம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் போது, அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

225 பாராளுமன்ற உறுப்பினர்களையும் பொதுமக்கள் நிராகரித்துள்ளனர். எனவே, அதில் ஓர் அங்கமாக இருக்க தாம் விரும்பவில்லை என்று பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார். (ஐ)

# நாடு திரும்பினார் ஜனாதிபதி ரணில்

கொழும்பு, பெப். 12

அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் இடம்பெற்ற 7ஆவது இந்து சமுத்திர மாநாட்டில் கலந்துகொள்ள சென்றிருந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்று முன்தினம் இரவு நாடு திரும்பினார்.

சிறீ லங்கன் எயார் லைன்ஸ் விமானமான ருடு-309 மூலம் ஜனாதிபதி மற்றும் தூதுக்குழுவினர் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த 8 ஆம் திகதி இரவு அவுஸ்திரேலியா பயணமாகி , 7ஆவது இந்து சமுத்திர மாநாட்டில் முக்கிய உரையை ஆற்றினார்.



இதன்போது, பல நாடுகளின் அரச தலைவர்களுடனும் ஜனாதிபதி இரு தரப்பு கலந்துரையாடல்களையும் நடத்தியிருந்தார். (ஐ)

# இருதய நோயாளர்கள் நாட்டில் அதிகரிப்பு!

கொழும்பு, பெப். 12

நாட்டில் இருதய நோயாளர்கள் பதிவாகின்றமை திடீரென அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சர் மருத்துவர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு போன்ற மருத்துவ நிலைமைகள் இந்த நிலையை ஏற்படுத்தியுள்ளது என்று காலியில் நடந்த நிகழ்வொன்றில் சுகாதார அமைச்சர் கூறினார்.

# தோட்டத் தொழிலாளர் சம்பள விவகாரம் நேரடியாகத் தலையிட்டு தீர்வு தாருங்கள்

## தொழில் அமைச்சரிடம் வடிவேல் சுரேஷ் கோரிக்கை

கொழும்பு, பெப். 12

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விவகாரத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நேரடியாக பணிப்புரை விடுக்கப்பட்டுள்ள போதிலும் கம்பனிகள் தான்தோன்றித்தனமாகவே செயல்படுகின்றன. எனவே தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார இவ்விடயத்தில் நேரடியாகத் தலையிட்டு தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் வடிவேல் சுரேஷ் வலியுறுத்தியுள்ளார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆகக் குறைந்த அடிப்படை சம்பளம் ஆயிரத்து 700 ரூபாய் வழங்கப்பட வேண்டும். இது தொடர்பில் கடந்த டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் தனக்கு அறிவிக்குமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முதலாளிமார் சம்மேளனத்துக்கு நேரடியாக பணிப்புரை விடுத்திருந்தார்.

எவ்வாறிருப்பினும் இதுவரையில் இவ்விடயம் தொடர்பில் எவ்வித பதில்களும் வழங்கப்படவில்லை. இது குறித்து வினவிய போதே வடிவேல் சுரேஷ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விவகாரத்தில் இனியும் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் முதலாளிமார் சம்மேளனத்துக்கு வழங்கப்பட்ட கால அவகாசம் நிறைவடைந்துள்ள இரு மாதங்களாகியுள்ளன. ஆனால், இவ்விடயத்தில் பெருந்தோட்டக் கம்பனிகள் தான்தோன்றித் தனமாகவே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

எனவே, இவ்விடயம் தொடர்பில் அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். இதனை பாராளுமன்றத்திலும் வலியுறுத்தியிருக்கின்றோம்.

இன்றைய வாழ்க்கை செலவுக்கு ஏற்ற வகையில் சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும். கூட்டு ஒப்பந்தம் நடைமுறையிலிருந்தபோது, இரு வருடங்களுக்கொருமுறை சம்பளம் அதிகரிக்கப்பட்டது. சம்பள நிர்ணய சபையின் ஊடாக அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கப்பட்டன.

ஆனால், கூட்டு ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டதன் பின்னர் 3 ஆண்டுகளாகியும் சம்பள உயர்வு வழங்கப்படவில்லை. எனவே, இவ்விடயத்தில் இனியும் பொறுத்திருக்க முடியாது. கம்பனிகள் தொழிலாளர்கள் குறித்து சிந்தித்து தீர்மானமொன்றை எடுக்கும் அதேவேளை, இவ்விடயத்தில் பெருந்தோட்ட மக்களுக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டிய தார்மீக பொறுப்பு அரசாங்கத்துக்கும் இருக்கிறது.

எனவே தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார இவ்விடயத்தில் நேரடியாகத் தலையிட்டு தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

# 70 இலட்சம் முட்டைகளை விநியோகிக்க நடவடிக்கை

கொழும்பு, பெப். 12

இந்த வருடம் இறக்குமதி செய்யப்பட்ட 70 இலட்சம் முட்டைகள் எதிர்வரும் வாரத்தில் லங்கா சதொச சிறப்பங்காடிகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளன என்று அரச வர்த்தக கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

பண்டிகை காலம் அண்மித்து வருவதனால் சந்தையில், முட்டைகளின் விலையை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

தற்போது சதொச சிறப்பு அங்காடிகளிலும், சில்லறை வர்த்தக நிலையங்களிலும் முட்டைகளை பெற்றுக் கொள்ள முடிவதில்லை என நுகர்வோர் குற்றம் சுமத்தி வருகின்றனர்.

இதேநேரம், இன்று திங்கட் கிழமை முதல் உள்ளூர் முட்டை ஒன்றின் விலை 65 ரூபாயாக அதிகரிக்கலாம் என்று அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் எதிர்வுகூறியுள்ளது. (ஐ)



# 'யுக்திய' நடவடிக்கையில் 667 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, பெப். 12

'யுக்திய' நடவடிக்கையில் நள்ளிரவு 12.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் 667 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் போதைப்பொருள் தொடர்பான குற்றச்சாட்டின் கீழ் 564 பேரும் தேடப்படும் குற்றவாளிகள் பட்டியலில் இருந்த 103 பேரும் அடங்குவர்.

போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடைய 564 சந்தேக நபர்களில், பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகம் மற்றும் பொலிஸ் விசேட பணியகம் ஆகியவற்றின் பட்டியலில் 7 சந்தேக நபர்கள் உள்ளனர்.

இந்த நடவடிக்கையின் போது, 153 கிராம் 655 மில்லிகிராம் ஹெரோயின், 88 கிராம் 255 மில்லிகிராம் ஐஸ், 06 கிலோ 462 கிராம் கஞ்சா, 4,688 கஞ்சா செடிகள், 113 போதை மாத்திரைகள், 180 மதன மோதகம், 147 மயக்க மாத்திரைகள் என்பன கைப்பற்றப்பட்டன. (ஐ)

## வெடுக்குநாறி...

ஆலயத்திலிருந்த சிவலிங்கம் உட்பட விக்கிரகங்கள் இனந்தெரியாதவர்களால் அடித்து உடைக்கப்பட்டு, தூக்கி வீசப் பட்டன. அத்துடன், சில விக்கிரகங்கள் களவாடப்பட்டிருந்தன. எனினும், நீதி மன்றின் அனுமதியுடன் கடந்த ஆண்டு ஏப்ரல் 28ஆம் திகதி சிலைகள் மீளவும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## குகதாசன்...

பா. அரியநேத்திரன், கோடீஸ்வரன் ஆகியோரும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

கூட்டத்தில், குகதாசனும், சிறீ நேசனும் பொதுச் செயலாளர் பதவியை தலா ஒரு வருடத்துக்கு பகிர்ந்து கொள்ள இணங்கினர். எனினும், முதலில் யார் பதவி வகிப்பது என்பதில் இணக்கம் காணப் படவில்லை.

இருவரும் பேசி எடுக்கும் முடிவுக்கு தாம் இணங்குவதாக கட்சியின் தலைவர் சிறீதரன் இதன்போது குறிப்பிட்டார். இந்த நிலையில் முடிவு எடுப்பதற்கு 2 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட்ட நிலையில் நேற்றைய தினம் இந்த சந்திப்பு நிறைவடைந்தது என்று தமிழ் அரசு கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

## வீதியில்...

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

விபத்தில் உயிரிழந்தவரும் அவரின் சகோதரரும் வயலில் நெல்லை அறுவடை செய்த பின்னர் அதை காய வைப்பதற்காக பிரதான வீதியில் ஒரு பாகத்தில் பரப்பியுள்ளனர். நெல் காயவிடப்பட்டதை வீதியில் செல்பவர்கள் உணரும் விதமாக லாண்ட்மாஸ்டரை ஒரு புறத்தில் நிறுத்தியதுடன் மறுபுறத்தில் மின்வெளிச்சம் ஒன்றையும் ஒளிர விட்டுள்ளனர்.

இதன் பின்னர் லாண்ட்மாஸ்டரின் பெட்டிக்குள் சகோதரர் படுத்துள்ளார். உயிரிழந்தவரான நாகேஸ்வரன் வீதியோரத்தில் படுத்துள்ளார். இந்த நிலையில், நேற்று அதிகாலை புலோலியிலிருந்து முகமாலை நோக்கி தம்பதியர் மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளனர். அந்தச் சமயம் எதிரே ஓட்டோ ஒன்று அதிக வெளிச்சத்துடன் வந்துள்ளது. ஓட்டோ வெளிச்சத்தை குறைக்காத (டிம் லைற்) நிலையில் மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் நிலை தடுமாறி கட்டுப்பாட்டை இழந்து வீதியில் படுத்திருந்தவருடன் மோதுண்டு சற்றுத்தூரம் சென்று வீதிக்கரையில் விழுந்துள்ளார்.

விபத்து நடந்த சத்தம் கேட்டு லாண்ட்மாஸ்டரில் படுத்திருந்தவர் எழுந்து வந்து, தம்பதியருக்கு உதவியுள்ளார். மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் தலையில் காயமடைந்த நிலையில் அவரை மருத்துவமனையில் சேர்ப்பிக்க உதவியுள்ளார். மோட்டார் சைக்கிளை செலுத்தியவரின் மனைவி சிறுகாயங்களுக்கு உள்ளானார். இதன் பின்னரே தனது சகோதரரை காணவில்லை என்று தேடியுள்ளார். அப்போது, நெல்லால் மூடப்பட்ட நிலையில் சகோதரன் கிடப்பதைக் கண்டு அவரை மருத்துவ மனையில் சேர்ப்பித்துள்ளார்.

இறந்தவரின் உடலில் காயங்கள் இல்லாத நிலையில் உடல்கூறாய்வில் தலைமீது மோட்டார் சைக்கிள் ஏறியதில், தலைக்குள் இரத்தக் கசிவு ஏற்பட்டு அவர் உயிரிழந்தார் என்று தெரியவந்தது.

இந்த மரணம் தொடர்பான விசாரணைகளை பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா நடத்தினார்.

பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை தொடர்ந்து வருகின்றனர்.

மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் காயங்களுக்கு உள்ளான நிலையில் பருத்தித்துறை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (ஐ-02)

## ஐ.நா...

நிபுணர்களுடன் இல்லை.

உள்நாட்டு சமூகத்துடன் பேச்சுகளை மேற்கொண்டு சில மாற்றங்களை மேற்கொள்ளப்போகின்றோம்- இவ்வாறு கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு அவர் அளித்த நேர்காணலில் தெரிவித்துள்ளார். (ஐ)

## மைத்திரியும்...

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புதுடில்லி செல்லவுள்ளார்.

இந்திய பயணத்தின் பின்னர், சுதந்திரக் கட்சியின் உயர்மட்ட அரசியல் தலைவர்கள் மற்றும் செயல்பாட்டாளர்களை சந்திப்பதற்காக அவர் அமெரிக்கா செல்லவுள்ளார் என்று சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது. (ஐ)

## ஐ.நா மனித....

ஆணையாளரின் வாய்மூல விளக்கமளிப்பு நடைபெறும்.

இதேவேளை, ஜெனிவா நகர்வுகள் குறித்து இலங்கை தூதரகம் ஊடாக அவதானித்து வருவதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கையின் சமகால மனித உரிமைகள் முன்னேற்றங்கள் மற்றும் நல்லிணக்க பொறிமுறைகளில் அடைந்துள்ள இலக்குகள் தொடர்பில் முழுமையான அறிக்கையை ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் கூறினார். (ஐ)

## நல்லிணக்க...

நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவின் சட்டவரைவின் அம்சங்கள் பற்றி கலந்துரையாடுவதும் நாட்டில் மீண்டும் யுத்தம் ஏற்படாத வகையில் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவது தொடர்பிலும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

அதிகார எல்லைகளில் உண்மை, நல்லிணக்கம் மற்றும் மறுசீரமைப்புக்கான பொறிமுறைகளின் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்த அறிக்கை தயாரித்தல் முன்மொழியப்பட்ட சட்டத்தின் கீழ் ஆணையாளர்களின் பரிசீலனைக்கான வழிகாட்டுதல்கள் தயாரித்தல் மற்றும் முனைப்புடன் பணியாற்றுவது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

பாதிக்கப்பட்டவர்களின் குரலுக்கு செவிசாய்ப்பதை உறுதிசெய்து பாதிக்கப்பட்டவர்களை மையமாகக் கொண்ட அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியம் உட்பட, நிலைமாறுகால நீதியின் பல்வேறு அம்சங்களைப் பற்றிய வலுவான கருத்துப் பரிமாறலுக்கு இந்த கலந்துரையாடல் வாய்ப்பளித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ஜனாதிபதி...

நடைபெறவுள்ளது. ஆயிரம் கோடி ரூபாய் பெறுமதியான மதிப்பீடு ஏற்கனவே நிதியமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பொதுத் தேர்தலுக்காக ஆயிரம் கோடி ரூபாய்க்கான ஆரம்ப மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான மதிப்பீடு ஏற்கனவே கடந்த வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன், அரசமைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கலைக்கப்பட்டால் பொதுத் தேர்தலுக்குத் தேவையான ஏற்பாடுகளை தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு வழங்குவதற்கு நிதியமைச்சு கட்டுப்பட்டுள்ளது.

இந்த வருடம் பொதுத் தேர்தலும் ஜனாதிபதித் தேர்தலும் நடத்தப்படுமாயின் அண்ணளவாக 2 ஆயிரம் கோடி ரூபாய் அவசியமானது. அது தொடர்பான மதிப்பீடுகள் தற்போதுள்ள தேவைகளுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளது - என்றும் அவர் கூறினார். (ஐ-சி)

# டிரோன் பறக்கவிட்டவர் தெல்லிப்பழையில் கைது!

யாழ்ப்பாணம், பெப். 12

தெல்லிப்பழை பகுதியில் டிரோன் கமெரா பறக்கவிட்ட குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தெல்லிப்பழை துர்க்காபுரம் பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய சந்தேகநபரே நேற்றுமுன்தினம் தெல்லிப்பழை பொலிஸாரால் ட்ரோனுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

முறையான அனுமதிப்பத்திரம் இல்லாமல், டிரோன் கமெராவை பறக்கவிட்டார் என்ற குற்றச்சாட்டிலேயே அவர் கைது செய்யப்பட்டார். (ஐ)

# யாழ். பல்கலை. கிளிநொச்சி வளாகத்தில் விகாரைக்கு அருகே தர்ம மண்டபம் திறப்பு

கிளிநொச்சி, பெப். 12

கிளிநொச்சி அறிவியல் நகர் யாழ் பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள பௌத்த விகாரைக்கு அருகில் தர்ம மண்டபம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக பிரதி துணைவேந்தர் கண்ணதாசன், பொறியியல் பீட பீடாதிபதி பிரபாகரன் மற்றும் மகா சங்க நாயக்க தேரர்கள் முன்னிலையில் இந்த மண்டபம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

புத்தபிரானின் வரலாற்று நூல்களை பெற்றுக் கொள்ளும் வகையிலும் பல்கலைக்கழக மாணவர்களின் ஒன்று கூடல், பொது நிகழ்வுகள், கருத்தரங்குகள் போன்றவற்றை நடத்தும் வகையிலும் தர்ம மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

திறப்பு விழா நிகழ்வில் பல்கலைக்கழக பீடாதிபதிகள், பௌத்த மத தலைவர்கள், கிறிஸ்தவ குரு முதல்வர், இஸ்லாமிய மௌலவி, பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் என இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஐ)

# மட்டக்களப்பு விபத்தில் காயமடைந்தவர் மரணம்!

மட்டக்களப்பு, பெப். 12

ஏறாவூரில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார்.

இந்த விபத்தில் ஏறாவூர் - 4ஆம் குறிச்சியைச் சேர்ந்த சண்முகராசா சுதர்சன் (வயது 37) என்பவரே உயிரிழந்தார்.

மட்டக்களப்பு - கொழும்பு நெடுஞ்சாலையில் ஏறாவூர் - ஆறுமுகத்தான் குடியிருப்பில் கடந்த வெள்ளிக்கிழமை இந்த விபத்து இடம்பெற்றது.

உயிரிழந்தவர் நகைக் கடை கூலித் தொழிலாளியாவார். இவர் மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது, வீதியில் நிறுத்தப்பட்டிருந்த பட்டா ரக வாகனத்தின் சாரதி கதவை திடீரென திறந்துள்ளார்.

இதனால், மோட்டார் சைக்கிளில் சென்றவர் நிலைதடுமாறி கீழே விழுந்துள்ளார். அந்தச் சமயம் பின்னால் வந்த மற்றொரு பட்டா ரக வாகனம் விழுந்தவரின் மீதேறியது.

இதில் படுகாயமடைந்தவர் ஏறாவூர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். எனினும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். (ஐ)

# ஐ. தே. கவிலிருந்து சென்றவர்கள் மீண்டும் கட்சிக்கு திரும்பமுடியும்

## வஜிர அபேவர்த்தன அழைப்பு

கொழும்பு, பெப். 12

ரணில் விக்கிரமசிங்க இருக்கும்வரை ஐக்கிய தேசிய கட்சிக்கு ஜனாதிபதி ஒருவரை ஏற்படுத்த முடியாது என்றே ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து பிரிந்து சென்றனர். ஆனால், நாட்டின் தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்பதால் பிரிந்து சென்றவர்களுக்கு மீண்டும் இணைந்துகொள்ள முடியும் என ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் கம்பஹா மாவட்ட சம்மேளன கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், எமது கட்சியிலிருந்து பிரிந்து சென்றவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு மீண்டும் கட்சியுடன் இணைந்துகொள்ள முடியாமல் இல்லை. ஏனெனில் , ரணில் விக்கிரமசிங்க இருக்கும்வரை ஐக்கிய தேசிய கட்சிக்கு ஜனாதிபதி ஒருவரை உருவாக்கிக்கொள்ள முடியாது என தெரிவித்தே அவர்கள் கட்சியை விட்டுச் சென்றார்கள். எவ்வாறாவது முரண்பாடு பிரிந்து ஐக்கியம் ஒன்றுபடும்போது நாங்கள் எங்களது ஜனாதிபதி ஒருவரை உருவாக்கிக்கொண்டோம்.

ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் ஓர் ஆசனத்தை வைத்துக் கொண்டு நாட்டின் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டமை உலக சாதனையாகும். எதிர்காலத்தில் இது தொடர்பாக புத்தகமும் எழுதப்படும். எவ்வாறு ஓர் ஆசனத்தை வைத்துக் கொண்டு ஜனாதிபதியாக முடியும் என ஆராய அது உலகில் அரசியல் செய்பவர்களுக்கு ஆய்வு புத்தகமாக இருக்கலாம்.

அத்துடன், அன்று நாங்கள் வெற்றிபெற வேண்டும் என்றிருந்தால், தப்பிச் சென்றிருக்க முடியும். என்றாலும் சரியான வெற்றி எங்கு இருக்கிறது என்பதைத் தப்பிச் சென்றவர்களுக்கு விளங்கவில்லை. அதனால் கிராமங்களில் இருக்கும் எமது கட்சியிலிருந்து பிரிந்து சென்றவர்கள் மீண்டும் எங்களுடன் இணைந்துகொள்ள முடியும். 1994ஆம் ஆண்டுக்கு பின்னர் மீண்டும் ஐக்கிய தேசிய கட்சியின் ஜனாதிபதி ஒருவரே இருக்கிறார். அதனால், ஐக்கிய தேசிய கட்சி எந்தளவு பலமிக்க கட்சி என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

எங்களுக்கு பாராளுமன்றத்தில் ஓர் ஆசனமே இருந்தது. அந்த ஆசனத்தின் மூலம் ஜனாதிபதி ஒருவரை உருவாக்கினோம். அதனால் இதனைவிட அதிகாரம் ஒன்று இருக்கிறதா என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். அடுத்த ஜனாதிபதி தேர்தலிலும் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவதில் எந்த சந்தேகமும் இல்லை - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# சிறார்களுக்கு சிகரெட் விற்பனை; 8 கடை உரிமையாளர்கள் கைது!

கொழும்பு, பெப். 12

சிறுவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்த 8 கடை உரிமையாளர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஹிக்கடுவை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதான பாடசாலைகளுக்கு அருகில் கடைகளை நடத்தி வந்த 8 பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்பட்டுள்ள விசேட நடவடிக்கையின் மூலமே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட கடை உரிமையாளர்களுக்கு எதிராக காலி நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# ஐ. தே. கவை தேர்வுசெய்யாவிடின் நாடு பாதளத்துக்கே சென்றுவிடும்

## அகில விராஜ் காரியவசம்

கொழும்பு, பெப். 12

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஐக்கிய தேசிய கட்சியே அதனைக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுத்துவந்துள்ளது. என்றாலும் எமது வேலைத்திட்டத்தை பூரணப்படுத்துவதற்கு முன்னர் எங்களை வீட்டுக்கு அனுப்பினார்கள். ஆனால், இந்த முறை மக்கள் சரியான தீர்மானத்தை எடுக்காவிட்டால் நாடு பாதாளத்துக்கே சென்றுவிடும் என ஐக்கிய தேசிய கட்சியின் உபதலைவர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் கம்பஹா மாவட்ட சம்மேளன கூட்டம் நேற்று நடைபெற்றபோது, அங்கு உரையாற்றிய அவர் மேற்கண்டவாறு கூறினார். இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

சர்வதேச நாடுகளின் உதவி இல்லாமல் வீழ்ச்சியடைந்திருக்கும் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாது. அதனை விளங்கிக்கொண்டதாலேயே ஜனாதிபதி சர்வதேச நாடுகளுக்கு சென்று அந்த நாடுகளின் உதவிகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்து வருகிறார். ஆனால் ஜனாதிபதியின் இந்த சர்வதேச பயணங்களை எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் தொடர்ந்து விமர்சனம் செய்து வந்தார்கள். ஆனால், தற்போது அவர்களும் சர்வதேச நாடுகளைச் சுற்றிவர ஆரம்பித்துள்ளனர்.

சர்வதேச நாடுகளின் உதவி இல்லாமல் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது என்பதை தற்போதுதான் இவர்களுக்கு விளங்கி இருக்கிறது. என்றாலும் சர்வதேச நாட்டு தலைவர்களை நன்கு அறிந்த ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்க மாத்திரமாகும். உலக நாட்டுத் தலைவர்களை எவ்வாறு கையாள வேண்டும் என்ற அனுபவம் இருப்பதும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மாத்திரமே.

நாட்டின் பொருளாதாரம் மறை பொருளாதாரமாகும்போது எல்லா சந்தர்ப்பங்களிலும், ஐக்கிய தேசிய கட்சி முன்வந்து, பொருளாதாரத்தை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கும்போது, அதனை பூரணப்படுத்த முன்னர் தேர்தலின் மூலம் எம்மை வீட்டுக்கு அனுப்பினார்கள். 2001இல் நாட்டின் பொருளாதாரம் மறை பெறுமானத்தில் இருக்கும்போது அதனைக் கட்டியெழுப்பி வரும்போது எம்மை வீட்டுக்கு அனுப்பினார்கள். 2015இலும் அதே நிலைமை ஏற்பட்டது.

இறுதியில் ஒரு ஆசனமும் இல்லாத நிலைக்கு ஐக்கிய தேசிய கட்சியை வீழ்ச்சியடையச் செய்தது. என்றாலும் மீண்டும் நாடு வீழ்ச்சியடைந்த சந்தர்ப்பத்தில் ரணில் விக்ரமசிங்கவுக்கு நாட்டை பொறுப்பேற்குமாறு தெரிவித்தனர். தற்போதும் ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்று, பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுத்துள்ளார். அதனால் நாட்டை கட்டியெழுப்பி பொருளாதாரத்தைப் பலப்படுத்திக் கொண்டிருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப்பினால், நாடு பாதாளத்துக்கே சென்றுவிடும்.

அதனால் நாட்டை கட்டியெழுப்பி பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத்திட்டத்தை அவ்வாறே கொண்டுசெல்ல அனைவரும் அதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அதற்குத் தேவையான தைரியத்தை அவருக்கு வழங்க வேண்டும் - என்றார். (ஐ)

# போதைப்பொருள் கடத்தல்காரர்களை கைது செய்ய நடவடிக்கை எடுங்கள்!

## பொலிஸ் அதிகாரிகளுக்கு நீதிவான் உத்தரவு

கொழும்பு, பெப். 12

**போதைப்பொருளை விற்பனை செய்பவர்களை மட்டும் கைது செய்யாமல் கடத்தலில் ஈடுபடும் உண்மையான குற்றவாளிகளை கைதுசெய்வதற்கு விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கொழும்பு - மாளிகாகந்தை பிரதான நீதிவான் திருமதி லோச்சனி அபேவிக்ரம வீரசிங்க பொலிஸ் அதிகாரிகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

அத்துடன், பாடசாலை மாணவர்களை போதைப்பொருளுக்கு அடிமையாக்கும் போதைப்பொருள் கடத்தல்காரர்களின் ஒழுங்கமைக்கப்பட்ட செயல்பாடுகள் குறித்து முழுமையான விசாரணை நடத்துமாறும் உத்தரவிட்டார்.

அபின் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் மாவா எனப்படும் போதைப்பொருள் பாடசாலை மாணவர்களை போதைக்கு அடிமையாக்கும் முதல் நடவடிக்கை என சுட்டிக்காட்டிய நீதவான், நாட்டின் எதிர்காலமாக விளங்கும் பாடசாலை மாணவர்களை காப்பாற்ற உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டார்.

மோதர, மட்டக்குளி, மருதானை போன்ற பிரதேசங் களைச் சுற்றி அபின் மூலம் உற்பத்தி செய்யப்படும் மாவா என்ற போதைப் பொருளை விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் பிரதிவாதிகள் பலர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே நீதிவான் பொலிஸாருக்கு இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

சில விற்பனையாளர்கள் மாத்திரமே பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டிய நீதவான், உண்மையான கடத்தல்காரர்களை கைது செய்வதற்கு விசாரணைகளை மேற்கொள்ளுமாறு எச்சரித்தார்.

போதைப்பொருள் விற்பனைக்காக நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட சந்தேகநபர்களிடம் விசாரணை செய்த நீதிவான், போதைப் பொருள் விற்பனைக்கு யார் கொடுத்தார்கள் என வினவியதுடன் சந்தேகநபர்களிடம் உண்மையை வெளிப்படுத்தி விசாரணைகளை மேற்கொண்டு போதைப்பொருள் கடத்தல்காரர்களை கைது செய்யுமாறு அறிவுறுத்தினார். (ஐ)

# தேர்தலில் சரியான தேர்வில்லையேல் கனவு காணவும் முடியாமல் போகும்!

## ஐக்கிய தேசியக் கட்சி சொல்கிறது

கொழும்பு, பெப். 12

ஒக்ரோபர் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் மக்கள் சரியான தீர்மானம் மேற்கொண்டு சரியான நபரை தெரிவு செய்யாவிட்டால் நாட்டின் எதிர்காலம் தொடர்பாக எமக்கு கனவு காண முடியாமல் போகும் எனஐக்கிய தேசிய கட்சியின் பிரதி தலைவர் ருவன் விஜயவர்த்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் கம்பஹா மாவட்ட சம்மேளன கூட்டத்தில் நேற்று பேசிய அவர் தெரிவித்தவை வருமாறு,

இந்த வருடத்தை தேர்தல் வருடமாகவே நாங்கள் பார்க்கிறோம். ஒக்ரோபர் மாதமாகும் போது எமக்கு ஜனாதிபதி தேர்தலுக்கு முகம்கொடுக்க வேண்டிவரும். அதன் பின்னர் பொதுத் தேர்தலுக்கு முகம்கொடுக்க வேண்டிவரும். அதனைத் தொடர்ந்து மாகாண, உள்ளூராட்சி தேர்தல்களுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்படும். அதனால் கட்சி என்றவகையில் தற்போது இருந்தே அதற்காக தயாராக வேண்டும்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் இந்த நாடு எந்த நிலையில் இருந்தது என்பது நாட்டு மக்களுக்கு தெரியும். நாங்கள் அனைவரும் வரிசைகளிலேயே இருந்தோம். அரசாங்க கணக்குகளில் ஒரு சதமும் இருக்கவில்லை. அன்று வங்குரோத்து நாட்டை பொறுப்பேற்க எந்தத் தலைவரும் முன்வரவில்லை. எதிர்க்கட்சியில் இருக்கும் தலைவர்கள் அவர்களின் பொறுப்பில் இருந்து தப்பிச் சென்றார்கள். எமது தலைவர் மாத்திரமே முன்வந்தார். ரணில் விக்கிரமசிங்க நாட்டின் பொறுப்பை ஏற்றுக் கொண்டதாலே இந்த நாட்டிலே ஸ்திரத்தன்மை ஏற்பட்டிருக்கிறது.

மேலும் ரணில் விக்கிரமசிங்க எடுத்த தீர்மானம் காரணமாகவே வங்குரோத்து நிலையில் இருந்து நாங்கள் வெளியில் வந்திருக்கிறோம். தீர்மானங்கள் எடுப்பதற்கு அவர் ஒருபோதும் பயப்படவில்லை. சவால்களுக்கும் பயம் இல்லை. அவ்வாறான ஒரு தலைவரே எமக்கு தேவை.

இந்த நாட்டை மீள கட்டியெழுப்புவதாக இருந்தால் நாங்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும். பிளவுபட்டுக்கொண்டு இந்த நாட்டை முன்னேற்றிச் செல்ல முடியாது. நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடி காரணமாக மக்கள் கஷ்டப்பட்டு வருவதை ஜனாதிபதி உணர்ந்துள்ளார். அதற்கு விரைவாக தீர்வுகாண தேவையான நடவடிக்கைகளை ஜனாதிபதி தற்போது எடுத்துள்ளார் - என்றார். (ஐ)

# பரந்துபட்ட கலந்துரையாடலுடனான இணைய பாதுகாப்பு சட்டமே தேவை

## யாழ். பல்கலை சட்டத்துறை தலைவர்

யாழ்ப்பாணம், பெப். 12

நிறைவேற்றப்பட்ட இணையப் பாதுகாப்புச் சட்டம் மீளப் பெறப்பட்டு, பரந்துபட்ட மட்டத்தில் கலந்துரையாடலுடனான புதிய சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என்பதே எமது விருப்பம் என யாழ். பல்கலைக்கழக சட்டத் துறைத் தலைவர் கோசலை மதன் தெரிவித்துள்ளார்.

“இணையப் பாதுகாப்புச் சட்டம் - பிரயோகமும் விளைவுகளும்” எனும் தலைப்பிலான கலந்துரையாடல் நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இதில், பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

“இணையப் பாதுகாப்புச் சட்டத்தின் முறையற்ற தன்மையை கேள்விக்கு உட்படுத்துவதற்கான அரசமைப்பு ரீதியான வாய்ப்புகள் இலங்கை உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்படுமா என்பதை நாங்கள் பொறுத்திருந்து பார்க்க வேண்டி இருக்கிறது.

இதேநேரம் இணையத்தில் இடம்பெறக்கூடிய வன்முறைகளை கட்டுப்படுத்துவதற்காக அல்லது அதன் மூலம் பாதிக்கப்படுகின்ற மக்களை பாதுகாக்க வேண்டியதான ஒரு தேவைப்பாடு நிச்சயம் இலங்கையில் இருக்கின்றது. இந்த இணையம் சார் வன்முறைகள் கட்டுக்கடங்காமல் இடம்பெற்று வரும் சூழ்நிலையில் வன்முறை களைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரு பிரத்தியேக சட்டத்தை நாங்கள் உருவாக்க வேண்டிய தேவை இருக்கின்றது.

அதில் யாருக்கும் மாற்று கருத்து இருப்பதற்கான வாய்ப்பில்லை. ஆனால், இவ்வாறான முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சட்டத்தை உருவாக்குகின்ற போது பரந்துபட்ட மட்டத்தில் கலந்துரையாடல்களை செய்து, வெளிநாடுகளிலுள்ள நல்ல நடைமுறைகளை ஒப்பிட்டு ஆராய்ந்து சட்டத்தை நிதானமாகவும் தெளிவான தன்மையிலும் இலங்கையில் உருவாக்க வேண்டிய தேவை இருக்கின்றது - என்றும் அவர் கூறினார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.02.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# கதாநாயக நடிகர்கள்: ஆட்சி செய்ய ஆசை! அரசியல் பேச அச்சம்!

ராஜன் குறை

மக்களாட்சியில் யார் வேண்டுமானால் கட்சி தொடங்கலாம் தேர்தலில் போட்டியிடலாம். மக்கள் ஆதரவளித்தால் ஆட்சி அமைக்கலாம். இது சிறு குழந்தைக்கும் தெரியும். சினிமாவில் கதாநாயகர்களாக நடிப்பவர்களுக்கு மக்களிடையே நல்ல அறிமுகம் இருக்கும். அவர்களை திரையில் பார்த்து ரசிப்பவர்கள் இருப்பார்கள். அதனால் அவர்கள் மக்களிடையே சென்று பிரச்சாரம் செய்வது சுலபம். அதனால் அவர்கள் கட்சி தொடங்க விரும்பலாம். மக்களாட்சியில் யாரும் அரசியலில் ஈடுபடலாம் என்பதால் அனைவரும் அதனை பொதுமக்கள் மாண்பு கருதி வரவேற்கவே செய்வார்கள்.

அப்படி ஒரு நடிகர் ஏற்கனவே உள்ள அரசியல் கட்சியில் சேராமல் தன் தலைமையில் கட்சி தொடங்கும் போது ஒரு முக்கியமான கேள்வி எழுகிறது. எதனால் கட்சி தொடங்கும் கதாநாயக நடிகருக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும் என்ற கேள்விதான் அது. அவர் சினிமாவில் நன்றாக நடனம் ஆடினார், சண்டை போட்டார், சிரிப்பு வரும்படி நடித்தார், உணர்ச்சிகரமாக நடித்தார் அதனால் அவர் முதல்வராக ஆட்சி செய்ய வேண்டும் என்று யாரும் கூற மாட்டார்கள். அது அபத்தமாக இருக்கும் என்று குழந்தைகளுக்குக் கூட தெரியும்.

அதனால் அந்த நடிகர் பொதுவாக என்ன சொல்வாரென்றால் எல்லா அரசியல் கட்சிகளும் ஊழல் செய்கின்றன, மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்கவில்லை, ஜாதி, மத பிரிவினைகளைப் பார்க்கின்றன் நான் அனைத்து மக்களும் பொதுவானவன், ஊழலே செய்ய மாட்டேன், என் ரசிகர் மன்றத்து நிர்வாகிகளெல்லாம் மக்கள் பிரதிநிதிகளானால் சுயநலம் இல்லாமல் மக்களுக்காக உயிரைக் கொடுத்து உழைப்பார்கள் என்று கூறுகிறார்கள்.

அதை எப்படி நம்புவது என்று கேட்டால், ஏற்கனவே ரசிகர் மன்றங்கள் நற்பணி மன்றங்களாக செயல்படுகின்றன என்று கூறுவார்கள். ரத்த தான முகாம்கள் நடத்தினார்கள், இலவச கண் சிகிச்சை முகாம் நடத்தினார்கள், வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு சேலை, வேட்டி கொடுத்தார்கள், பள்ளி மாணவர்களுக்கு பேனா, பென்சில், கால்குலேட்டர் எல்லாம் வாங்கிக் கொடுத்தார்கள் என்று பல நற்பணிகளைப் பட்டியில் இடுவார்கள்.

இவர்கள் ஆட்சிக்கு வந்தால் மொத்த அரசே ஒரு நற்பணி மன்றம் போல செயல்பட்டு மக்களுக்கு தேவையானதையெல்லாம் செய்து கொடுக்கும் என்று கூறுவது போல தோன்றும். அப்புறம் ஒட்டுமொத்தமாக சிஸ்டத்தை மாற்றி அமைப்போம், முழுப்புரட்சி செய்வோம், “போர்! போர்!” என்றெல்லாம் வீரமாக பொத்தாம் பொதுவாக எதையாவது பேசுவார்கள்.

ஒட்டுமொத்தத்தில் நடிகர் மிகவும் பிரபலமானவர் என்பதால் மக்கள் அவர் கட்சிக்காரர்களுக்கு வாக்களித்தால் அவர் முதல்வராகிவிட்டால் “நான் ஆணையிட்டால், அது நடந்துவிட்டால் இங்கு ஏழைகள் வேதனைப் பட மாட்டார்” என்று முடித்துவிடுவார்கள்.

இவ்வாறு பேசுவது ஆட்சிக்கு வரும் விருப்பம்தானே தவிர, அரசியலுக்கு வரும் விருப்பமல்ல. அரசியல் என்பது எண்ணற்ற சமூக முரண்பாடுகளின் களம். கார்ல் ஷ்மிட் என்ற அறிஞர் கூறியதுபோல எதிரி X நண்பன் என்பதே அரசியல். எதிரி என்றால் தனிப்பட்ட எதிரி அல்ல் போட்டி நடிகர் அல்ல. அரசியல் எதிரி என்பது வேறு ரகம்.

### அரசியல் என்றால் என்ன?

இன்றுள்ள மக்களாட்சி நடைமுறை உருவாகி இன்னம் 250 ஆண்டுகள் கூட நிறைவடையவில்லை எனலாம். அதாவது மன்னரல்லாத அரசியலமைப்பு சட்ட குடியரசு 1776-ம் ஆண்டு அமெரிக்காவில்தான் முதன்முதலில் உருவானது. மக்களே பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்து தங்களைத் தாங்களே ஆண்டுகொள்வதுதான் மக்களாட்சி. அதற்கு 13 ஆண்டுகள் கழித்து பிரெஞ்சுப் புரட்சி 1789-ம் ஆண்டு வெடித்தது. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற முழக்கம் உலகளாவிய மக்களாட்சி லட்சியமாக முன்மொழியப்பட்டது.

அதற்கு முன்னால் மன்னராட்சியில் மன்னர்கள், நிலப்பிரபுக்கள், மதகுருமார்கள், சாதாரண மக்கள் என்ற கட்டமைப்புதான் பரவலாக இருந்தது. இதிலும் மத அமைப்பிலோ அல்லது வேறு விதமாகவோ பலவிதமான ஒழுக்க விதிகள், கட்டுப்பாடுகள் இருந்தாலும் அதனை நடைமுறைப்படுத்துவது அரசர்களின் எதேச்சதிகாரமாக இருந்தது. மக்களுக்கான உரிமைகள் என்பது உத்தரவாதமில்லாமல் இருந்தன.







இதில் முதலீட்டிய பொருளாதாரம் உருவான பிறகு வர்த்தகர்கள், தொழில்முனைவோர் ஆகிய புதிய அதிகார மையங்கள் உருவானபோது அவர்கள் புதியதொரு அரசமைப்பை உருவாக்க நினைத்தார்கள். அச்சு ஊடகத்தின் பரவல், அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி எல்லாம் சேர்ந்த புதிய மத்தியதர வர்க்கமும் இந்த மாற்றத்தை வலியுறுத்தியதால் மக்களாட்சி என்ற நடைமுறை உருவாகியது. அனைத்து மக்களும் சுதந்திரமானவர்கள், சமமானவர்கள் ஆகிய சிந்தனைகள் உருவாயின.

ஆனால், ஏற்கனவே இருந்த பொருளாதார ஏற்றத்தாழ்வு, சமூகப் பிரிவினைகள் ஆகியவையும் இருந்தன. அதனால் மக்களில் பல்வேறு தொகுதியினருக்குள் இருந்த முரண்பாடுகள் பல்வேறு சமூக இயக்கங்களைத் தோற்றுவித்தன. குறிப்பாக தொழிலாளர்கள் ஒன்று திரண்டு அவர்கள் பிரச்சினைகளுக்காக போராடினார்கள். விவசாயிகளும் அவர்கள் கோரிக்கைகளுக்காக போராடினார்கள். அப்படியே சமூகத்தின் அனைத்து பிரிவினரும் தங்கள் உரிமைகள், கோரிக்கைகளுக்காக அமைப்பாக மாறுவதில்தான் மக்களாட்சி அரசியல் கால்கொண்டது.

அரசு அனைவருக்கும் பொதுவானதாக இருந்தாலும், வரி விதிப்பில் எத்தகைய கொள்கைகளை பின்பற்றுவது, முதலாளிகளுக்கும், செல்வந்தர்களுக்கும் வரி விதித்து, பிற சாமானிய மக்களுக்கான வசதிகளை செய்துகொடுப்பது என்ற மக்கள்நல அரசு மாதிரிகள் தோன்றின.

முதலாளிகளுக்கும், கார்ப்பரேட்களுக்கும் வரியைக் குறைத்து பொருளாதாரத்தை வளர்ப்பது, சந்தையைக் கட்டுப்படுத்தாமல் இருப்பது, தனிச்சொத்தைப் பெருக்குவது என்பவை வலதுசாரி முதலீட்டியக் கொள்கைகள். செல்வக் குவிப்புகளுக்கு அதிக வரி விதித்து, சந்தை நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தி, சமூக முழுமைக்கும் வாழ்வாதாரத்தை உத்தரவாதம் செய்வது இடதுசாரி




சோஷலிச சிந்தனை.

சமூகத்தின் அனைத்து வளங்களும் பொது உடமையாக இருக்க வேண்டும், எல்லா பொருளாதார நடவடிக்கைகளும் அரசு கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்ற கம்யூனிச சித்தாந்தமும் தோன்றியது.

இந்தியாவின் மற்றொரு முக்கியமான அரசியல் பிரச்னை என்பது அதன் கூட்டாட்சி வடிவமாகும். மாநிலங்களில்தான் அரசுகள் உள்ளன. அனைத்தையும் இணைக்கும் ஒன்றிய அரசாங்கம்தான் தேசிய அளவில் உள்ளது. ஒன்றியத்திற்கும், மாநிலத்திற்குமான அதிகாரப் பகிர்வு சரிவர வகுக்கப்படவில்லை. ஒன்றியத்தில் அதிகாரம் குவிந்திருப்பது பல்வேறு மாநில அரசுகளாலும் கண்டிக்கப்படுகிறது. நாள்தோறும் பிரச்சினைகள் பெருகுகின்றன. ஒரு மாநிலக் கட்சி இந்த முக்கியமான பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டும்.

அரசின் ஒவ்வொரு கொள்கை முடிவும், வரி விதிப்பும் சமூகத்தில் பல்வேறு மக்கள் பிரிவினரிடையே தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியது என்பதால் அரசு என்பது வெறும் நற்பணி மன்றமல்ல. ஓர் அரசியல் கட்சி எந்த வகையில் சமூக இடைவெளிகளைக் குறைப்பது என்பதைக் குறித்த ஆழ்ந்த புரிதலுடன் செயல்பட வேண்டும். அதைத்தான் நாம் கொள்கை என்று அழைக்கிறோம். முரண்பாடுகளை சமன் செய்வதே அரசியல் என்னும் கலை என்றார் சமூகநீதிக் காவலர் வி.பி.சிங்.

### பெரும்பாலான அரசியல் கட்சிகள் எப்படி உருவாயின?

திராவிட முன்னேற்றக் கழகம் ஜாதீய ஏற்றத்தாழ்வைகளையும் சமூகநீதியை முன்வைத்தும், மாநில சுயாட்சி, மாநில உரிமைகளை முன்னிலைப்படுத்தியும், இந்தி திணிப்பை எதிர்த்தும் பிறந்தது. அது முதலில் தென்னிந்திய மாநிலங்களை தனி கூட்டாட்சி குடியரசாக, திராவிட நாடாக உருவாக்கும் லட்சியத்தைக் கொண்டிருந்தது. பின்னர் இந்திய கூட்டாட்சியிலேயே மாநில சுயாட்சி கோரிக்கையாக மாற்றிக்கொண்டது. சோஷலிச பார்வை கொண்டது.

எம்.ஜி.ஆர் தி.மு.க-விலிருந்து பிரிந்தாலும் அண்ணாவின் கொள்கைகள்தான், அண்ணாயிசம்தான் தன் கட்சியின் கொள்கை என்று கூறினார். அண்ணா பெயரில்தான் கட்சியே தொடங்கினார். அதனால் அவர் தி.மு.க-வின் நகல் என்றுதான் கூற வேண்டும். நாளடைவில் தி.மு.க-விலிருந்து சில பல அம்சங்களில் வேறுபாடுகளை உருவாக்கினார். ஆனாலும் மாநில உரிமை, சமூக நீதி அரசியல் தடத்திலிருந்து முற்றாக விலகவில்லை. அ.இ.அ.தி.மு.க என்பது தி.மு.க-விற்கு ஒரு மாற்று என்பதே அதன் வரலாற்று விளக்கம்.

முத்துராமலிங்க தேவரின் ஃபார்வார்டு பிளாக் முக்குலத்தோரின் நலன்களை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சியாக உருவானது. பாட்டாளி மக்கள் கட்சி வன்னியர் சங்கத்திலிருந்து உருமாறி வன்னியர் நலனுக்கான கட்சியாக நிறுவிக்கொண்டது. கம்யூனிஸ்டு கட்சிகள் தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோரின் வர்க்க நலன்களை முன்னெடுக்கும் கட்சிகளாக தங்களை நிலைநிறுத்திக் கொண்டன. விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலித் மக்களின், குறிப்பாக ஆதி திராவிட மக்களின் நலன்களை முன்னிலைப்படுத்தும் முற்போக்குக் கட்சியாக உருவாகியுள்ளது.

மக்களாட்சியில் எல்லா கட்சிகளுமே பொதுவான சமூக நலனுக்கு இயங்கினாலும் அவர்கள் முன்னிலைப்படுத்தும், பிரதிநிதித்துவப்படுத்தும் சமூகப் பிரிவுகள் என்ன, அவர்கள் கொள்கைகள் எந்த லட்சியங்களைக் கொண்டுள்ளன என்பது தெளிவாக இருப்பதுதான் அரசியல்.

### நடிகர்களின் கட்சிகள் எப்படி உருவாகின்றன?

கதாநாயக நடிகர்கள் தங்கள் திரைப்படங்களை எல்லோருமே பார்த்து ரசிப்பதால் எல்லா மக்களுக்குமான கட்சியையே தொடங்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். அப்போது சமூகத்திலுள்ள முரண்களை எப்படி எதிர்கொள்வார்கள் என்று கேட்டால் ஏதாவது பொத்தாம்பொதுவாக மனிதநேய சிந்தனைகளைக் கூறுகிறார்கள். எந்த அரசியல் பிரச்சினையையும் எதிர்கொள்ள அஞ்சுகிறார்கள். எல்லோருக்கும் நல்லவராக இருப்பதாக காட்டிக்கொள்ள நினைக்கிறார்கள். ஆட்சிக்கு வர ஆசைப்படுகிறார்கள். அரசியல் பேச அஞ்சுகிறார்கள்.

(16ம் பக்கம் பார்க்க)

# இந்திய ஊடகத்திற்கு பேட்டி:

# “அதிகாரப்பட்டியலில் உள்ள அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்குவோம்”

## அடுத்த ஆண்டு தேர்தலும் நடக்கும் என்கிறார் ரணில்!



இலங்கை பொருளாதார நெருக்கடியில் சிக்குண்டிருந்தவேளை இந்தியா வழங்கிய உதவிகள் ஆதரவிற்கு இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது நன்றியை தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகமான **wion** ற்கு வழங்கிய பேட்டியில் அவர் இதனை தெரிவித்துள்ளார். இந்தியாவிற்கு நன்றி இந்தியா இல்லாவிட்டால் நாங்கள் தப்பியிருக்கமாட்டோம், இதன் காரணமாகவே இரு நாடுகள் மத்தியிலான உறவுகளை வலுப்படுத்துவது குறித்து கவனம் செலுத்துகின்றோம் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

கேள்வி – எனது முதல் கேள்வி இந்திய இலங்கை உறவுகளை எவ்வாறு பார்க்கின்றீர்கள் இந்த உறவுகள் குறித்த உங்கள் தொலைநோக்கு பார்வை என்ன ?

பதில் - உண்மையில் இந்திய இலங்கை உறவுகள் முன்னேற்றமடைகின்றன. நாங்கள் இரு நாடுகளிற்கும் இடையில் நெருங்கிய உறவுகளை ஏற்படுத்த முயல்கின்றோம், இரு நாடுகளிற்கும் இடையிலான தொடர்புகளை அதிகரிக்க முயல்கின்றோம். இதுவே சரியான வழி என நான் கருதுகின்றேன்.

கேள்வி- இலங்கை பொருளாதார நெருக்கடியில் சிக்குண்டிருந்த வேளை 4 பில்லியன் டொலர் உதவியுடன் முன்வந்த நாடு இலங்கை உங்கள் நாட்டிற்கான இந்தியாவின் உதவியை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?

பதில்-நாங்கள் இந்தியாவிற்கு நன்றியுடையவர்களாக உள்ளோம் இந்தியா இல்லாவிட்டால் நாங்கள் தப்பிபிழைத்திருக்கமாட்டோம். இதன் காரணமாகவே நாங்கள் இரு நாடுகளிற்கும் இடையிலான நெருங்கிய உறவு குறித்து கவனம் செலுத்துகின்றோம் குறிப்பாக வர்த்தக பொருளாதார வெற்றிகள் குறித்து முன்னோக்கி செல்வதற்கு இதுவே வழி.

கேள்வி- உங்கள் நாட்டின் பொருளாதார நிலைமை தற்போது எவ்வாறு உள்ளது?

பதில்- நாங்கள் கடன் மறுசீரமைப்பை முன்னெடுத்தோம் அதனை பூர்த்தி செய்துள்ளோம். நாங்கள் ஓசிசியுடன் உடன்படிக்கையொன்றை செய்து கொள்ளவேண்டும். எங்களின் நடவடிக்கைகளை அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர், ஆரம்ப கட்ட நடவடிக்கைள் தற்போது இடம்பெறுகின்றன உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவுடனான உடன்படிக்கைக்கு பின்னர் நாங்கள் ஏனைய அனைத்து



கடன்வழங்கிய நாடுகளுடனும் நிதியமைப்புகளுடனும் உடன்படிக்கையை செய்துகொள்ளவேண்டும்.

கேள்வி - அது எப்போது சாத்தியமாகும்?

பதில்- ஜூன் மாதமளவில் அது சாத்தியமாகும் என நினைக்கின்றேன்.

கேள்வி - பிராந்திய பாதுகாப்பு என்ற விடயம் குறித்து பேசும்போது சீன கப்பல்களின் விஜயம் குறித்து இந்தியா கவலை கொண்டுள்ளது. சீன கப்பல்களிற்கு அனுமதி வழங்குவது இல்லை என்பது குறித்து இலங்கை ஆராய்ந்து வருவதாக அறிகின்றேன். சீன கப்பல்களின் விஜயங்கள் குறித்தும் அவற்றிற்கு அனுமதி வழங்குவதில்லை என்ற தீர்மானம் குறித்தும் கருத்துகூற முடியுமா?

பதில்- நாங்கள் எப்போதும் இந்தியாவின் பாதுகாப்பை மனதில் கொண்டிருப்போம். இந்தியாவின் பாதுகாப்பிற்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கைளிற்கு அனுமதியளிக்கமாட்டோம் என தெரிவித்துள்ளளோம்.

இலங்கைக்கு வந்த சென்ற சீன கப்பல்கள் கடல் ஆராய்ச்சியுடன் தொடர்புபட்டவை. அதன் காரணமாக அவற்றிற்கு நாங்கள் அனுமதி வழங்கியுள்ளோம்.

ஏனைய நாடுகளின் ஏனைய கப்பல்களுக்கு அனுமதிவழங்கப்பட்டுள்ளதா? இந்த ஆண்டு இலங்கையின் திறனை கட்டியெழுப்புவது என நாங்கள் தீர்மானித்துள்ளோம். ஏனையவர்களுடன் ஒத்துழைப்பதன் மூலம் இலங்கை தனது சொந்ததிறனை கட்டியெழுப்பவேண்டும் என நாங்கள் தீர்மானித்துள்ளோம்.

இதன்காரணமாக எந்தவொரு நாட்டிலிருந்தும் நீரியல் விடயங்கள் தொடர்பில் இலங்கைக்கு கப்பல்கள் வரமுடியாது என நாங்கள் தெரிவித்துள்ளோம். ஆனால் வழமையான விஜயத்தினை மேற்கொள்ளும் கடற்படை கப்பல்களாகயிருந்தால் அவற்றிற்கு அனுமதி வழங்குவோம்.

கேள்வி - உங்களிற்கு சீனா கப்பல்களின் வருகை குறித்து தெரியவருமா?

பதில் - சீன கப்பல்கள் இலங்கைக்கு வருகின்றன, இந்திய கப்பல்கள் வருகின்றன, ஜப்பான் கப்பல்கள் வருகின்றன அனைத்து கப்பல்களும் வருகின்றன - அமெரிக்க கப்பல்கள் வருகின்றன.

கேள்வி- இந்தியா இந்த விஜயங்கள் குறித்து கவலையடைந்துள்ளது, இந்து சமுத்திர பிராந்தியத்தில் சீனாவின் அதிகரித்துவரும் பிரசன்னம் குறித்து கவலையடைந்துள்ளது என்பதால் சீனா இந்தியாவிற்கும் உங்களிற்கும் இடையில் பிளவை ஏற்படுத்த முயல்கின்றது என கருதுகின்றீர்களா?

பதில் - சீனகப்பல்கள் நீண்டகாலமாக இலங்கைக்கு வருகின்றன. சீனா இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் பிளவை ஏற்படுத்த முயலவில்லை, நாங்கள் இந்தியாவுடன் இணைந்து செயற்படவேண்டும் என்றே அவர்கள் தெரிவிக்கின்றனர்.

நாங்கள் கரிசனை கொள்ளவேண்டிய விடயம் என்று எதுவுமில்லை, இலங்கைக்கு வரும் கப்பல்களின் எண்ணிக்கை அதிகரிக்கவும் இல்லை, குறையவுமில்லை, மேலும் இலங்கைக்கு வருகை தராத நாடுகளின் கப்பல்களை இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளுமாறு நாங்கள் ஊக்குவிக்கின்றோம்.

கேள்வி - கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் சீனாவின் பங்களிப்பு - சீனா உரிய பதில்கள் இல்லாமல் இழுத்துச் செல்கின்றதே?

பதில் - கடன் மறுசீரமைப்பு குறித்து சீனாவிடம் நோக்கம் உள்ளது. அவர்கள் உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் குழுவில் இல்லை. ஆனால் அவர்கள் கூட்டங்களில் கலந்துகொள்கின்றனர். இதற்கான அவர்களின் கட்டமைப்பு ஏனைய நாடுகளிடமிருந்து வித்தியாசமானது என்பதை அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். நாங்கள் சீனாவின் அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து செயற்படவேண்டும். அந்த நாட்டின் எக்சிம் வங்கியுடனும் இணைந்து செயற்படவேண்டும்.

கேள்வி - மற்றுமொரு முக்கியமான விடயம் 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது. இது குறித்து இந்தியா தனது நிலைப்பாட்டை தெரிவித்து வருகின்றது - முன்னோக்கி செல்வதற்கான வழி என்ன?

பதில் - அடுத்த வருடம் மாகாண சபை தேர்தல்களை நடத்துவோம் நாடாளுமன்ற அமர்வுகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றியவேளை நான் தெரிவித்தது போல நாங்கள் ஒவ்வொரு மாகாணசபைக்கும் அதன் சொந்த பொருளாதாரத்தை வழங்க விரும்புகின்றோம்.

அதன் காரணமாக இந்தியா போன்று ஒவ்வொரு மாகாணமும் ஏனைய மாகாணத்தின் பொருளாதாரத்துடன் போட்டியிடும்.இதனால் நன்மையேற்படும் பொருளாதாரம் போட்டித்தன்மை மிகுந்ததாக காணப்படும்.

மேலும் இந்த மாகாணங்கள் தங்களின் பொருளாதார சமூக அபிவிருத்தியை



தேசிய கொள்கை கட்டமைப்பிற்குள் கையாளவேண்டும்.

இந்த அடிப்படையில் ஒருங்கியல் அதிகாரப்பட்டியலில் உள்ள அதிகாரங்களை அதில் அனேகமானவற்றை அல்லது தேவையானவற்றை வழங்க தயாராகவுள்ளோம்.

சில சிறுபான்மை குழுக்கள் செனெட்டிற்கான வேண்டுகோளை விடுத்துள்ளன. என்னை பொறுத்தவரைக்கும் எங்களை பொறுத்தவரைக்கும் நாங்கள் அதனை எதிர்க்கமாட்டோம். ஆனால் இதனை வெறுமனே அரசாங்கம் மாத்திரம் ஏற்றுக்கொள்ள முடியாது அனைத்து கட்சிகளும் ஏற்றுக்கொள்ளவேண்டும். நாடாளுமன்றத்தில் பல கட்சிகள் உள்ளன. ●

# கதாநாயக நடிகர்கள்:...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

**விஜய்காந்த்:**

விஜய்காந்த் என்ற கதாநாயக நடிகர் அப்படித்தான் தேசிய முற்போக்கு திராவிடர் கழகம் என்று கலவையான பெயரில் கட்சி தொடங்கினார். தான் தி.மு.க, அ.இ.அ.தி.மு.க ஆகிய இரண்டு கட்சிக்கும் மாற்று என்றார். ஒன்பது சதவிகித வாக்குகளை இந்த “மாற்று” என்ற பெயரில் பெற முடிந்தது.

ஆனால், அதற்குமேல் அவரால் அரசியல் பேச முடியவில்லை. எந்த பிரச்சினைக்காகவும் எந்த மக்கள் தொகுதியையும் அணி திரட்ட முடியவில்லை. இறுதியில் ஜெயலலிதாவுடன் கூட்டணி வைத்தார். அதன் பிறகு “மாற்று” என்ற லட்சியம் காணாமல் போனதில் அவர் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களே கட்சி மாறிவிட்டார்கள். இறுதியில் அவர் கட்சி எந்த முக்கியத்துவமும் இல்லாத கட்சியாக மாறிவிட்டது.

**ரஜினிகாந்த்:**

ரஜினிகாந்த் 1996-ம் ஆண்டு ஜெயலலிதா ஆட்சி ஏற்படுத்திய அதிருப்தி அலையில் அவர் ஆட்சியை அகற்ற வேண்டும் என்று குரல் கொடுத்தார். அந்த தேர்தலில் ஜெயலலிதா படுதோல்வி அடைந்ததில் அவருக்கு பங்கிருப்பதாக ஒரு பிம்பம் உருவானது. ஆனால், எந்த அரசியல் கட்சியிலும் சேர மறுத்தார். அவரை எப்படியாவது அரசியலுக்குக் கொண்டு வர சோ ராமசாமி உள்ளிட்ட பாஜக-வினர் கடுமையாக முயன்றார்கள்.

அவருக்கு தனிப்பட்ட முறையில் பாஜக அரசியல் பிடித்திருந்தாலும், தமிழ்நாட்டில் அந்த அரசியல் பேசினால் சிக்கல் என்பதை பாபா படம் அடைந்த தோல்வியிலிருந்து புரிந்துகொண்டார். அதனால் அவரால் கட்சி தொடங்குவதைப் பற்றி எந்த நிலைப்பாடும் எடுக்க முடியவில்லை. கலைஞரையும், ஜெயலலிதாவையும் மாறி, மாறி புகழ்ந்தார்.

கலைஞரும், ஜெயலலிதாவும் மறைந்த பிறகு அரசியலுக்கு வர முற்பட்டார். அப்போதும் தான் யாரையும் எதிர்த்து அரசியல் செய்யவில்லை என்றார். ஒட்டு மொத்த சிஸ்டத்தையும் மாற்றப் போகிறேன் என்றார். கொள்கை என்னவென்று கேட்டால் தலை சுத்துகிறது என்றார்.

எல்லோரும் மக்களை அணி திரட்டுங்கள் - நான் பிறகு வந்து தலைமையேற்கிறேன் என்று கூறி திடுக்கிட வைத்தார். நான் முதலமைச்சராகப் பதவியேற்று எல்லோர் கேள்விக்கும் பதில் சொல்லிக்கொண்டிருக்க மாட்டேன் என்றார். இவர் கட்சியை கட்டமைத்துக் கொடுக்க பாஜக-விலிருந்து ஒருவரை இரவலாகப் பெற்றார். இறுதியில் நல்லவேளையாக உடல்நிலை சரியில்லை, அரசியலுக்கு வரவில்லை என்று முற்றுப்புள்ளி வைத்தார்.

**கமல்ஹாசன்:**

மக்கள் நீதி மய்யம் என்று கட்சிக்கு பெயர் வைத்தார். வலதுசாரியும் இல்லாத, இடதுசாரியும் இல்லாத நடுப்பாதை, செண்டிரிஸ்ட் கட்சி என்றார். ஆனால் தெளிவாக நான் பாஜக-வை எதிர்க்கிறேன். அ.இ.அ.தி.மு.க-வை எதிர்க்கிறேன். தி.மு.க-வை எதிர்க்கிறேன் என்றெல்லாம் பேச மாட்டார். பள்ளப்பட்டியில் போய் இந்த நாட்டின் முதல் தீவிரவாதி இந்து தான் என்பார். மற்ற இடங்களில் தெளிவாக ஆர்.எஸ்.எஸ் நாட்டை பிளவுபடுத்தும் இயக்கம் என்று சொல்ல மாட்டார்.

திரைப்படங்களில் போட்டி நடிகர்களை இவர்கள் குறை சொல்ல முடியாது. விஜய்காந்துக்கு நடிக்கத் தெரியாது என்று பொதுவெளியில் கமல்ஹாசன் சொல்ல முடியாது. அது தொழிலுக்கு நல்லதல்ல. ஒருவர் படத்தை மற்றவர் விமர்சித்தால் பொதுவாக தொழிலும், வர்த்தகமும் பாதிக்கப்படும் என்பதால் அது விரும்பத்தக்கதல்ல.

அரசியல் அப்படி இல்லை. எடப்பாடிக்கு ஆட்சி செய்யத் தெரியவில்லை அவர் ஊழல் செய்கிறார் என்று ஸ்டாலின் சொல்லத்தான் வேண்டும். ஸ்டாலின் ஆட்சி சரியில்லை என்று எடப்பாடி கூறத்தான் வேண்டும். “சௌகிதார் சோர் ஹை” என்று மோடியை திருடன் என்று ராகுல் காந்தி குற்றம் சாட்ட வேண்டும். ஏனெனில் அரசியலில் முரண்களும், எதிர்ப்பும் அவசியம். வன்முறை கூடாதே தவிர, கருத்தியல் எதிர்ப்பு, கண்டனம் என்பது இன்றியமையாதது.

ஆனால், நடிகர்களாகவே வாழ்ந்து பழகியதால் இவர்களால் பகிரங்கமாக அரசியலில் யாரையும் விமர்சித்து பேச முடிவதில்லை. கமல்ஹாசனால் இட ஒதுக்கீடு பற்றிய கேள்விக்குக் கூட தெளிவாகப் பதில் கூற முடியவில்லை. அருகிலிருந்தவரைக் காட்டி அவர்தான் கொள்கைகளை வகுத்துக் கொண்டுள்ளார் என்று கூறிவிட்டார்.

**விஜய்:**

இந்தப் பட்டியலில்தான் மற்றொரு கதாநாயக நடிகர் விஜய் இப்போது சேர்ந்துள்ளார். “தமிழக வெற்றி கழகம்” என்று ஒற்றுப்பிழையுடன் பெயர் வைத்துவிட்டார். ஆனால், நாடாளுமன்றத் தேர்தலில் அவருக்கு எந்த நிலைப்பாடும் கிடையாதாம்.

நீட் தேர்வில் வெற்றிபெற முடியாமல் அனிதா தற்கொலை செய்துகொண்டபோது நாடே கொந்தளித்ததே, அப்போது விஜய் எங்கே போயிருந்தார்? அவருக்கு நீட் தேர்வு எத்தகைய பிரச்சினை என்றே தெரியாதா? நடிகர் சூர்யா கூட குரல் கொடுத்தாரே?

அவரையே ஜோசப் விஜய் என்று மதச்சாயம் பூசி பாஜக விமர்சித்ததே? அது மத அடையாளம் பேசி நாட்டைப் பிளவுபடுத்துகிறது என்று தெரியாதா? தமிழ்நாட்டு நலன்கள் ஒன்றிய அரசால் புறக்கணிக்கப்படுகிறதென்று ஊடகங்களில் பல்வேறு தரப்பினரும் ஓயாமல் குரல் கொடுக்கிறார்களே? அதெல்லாம் அவர் காதிலேயே விழவில்லையா?

குடியுரிமை திருத்தச் சட்டத்தை ஒரு வாரத்தில் அமலாக்கிவிடுவோம் என பாஜக அமைச்சர் ஒருவர் பேசுகிறாரே? முதல்வர் ஸ்டாலின் கண்டித்து அறிக்கை விடுகிறாரே? அதையெல்லாம் படிக்க மாட்டாரா இந்த எதிர்கால அரசியல்வாதி?

நாடாளுமன்றத் தேர்தலில் பாஜக ஆட்சிக்கு வர வேண்டுமா? வேண்டாமா? என்ற ஒரு நிலைப்பாடே இல்லாமல் எதற்காக தேர்தல் நெருங்கும்போது கட்சி தொடங்குகிறார்? இது யார் கொடுத்த அசைன்மைண்ட் என்று மக்கள் கேட்கிறார்களே? அவருக்குப் புரியாதா?

**பிரகாஷ் ராஜ் என்ற அரசியல்வாதி**

பிரகாஷ் ராஜ் விஜய்யின் பல படங்களில் வில்லனாக நடித்தவர். பல படங்களில் குணசித்திர வேடங்களிலும் நடித்தவர். அவர் வளர்ந்த ஊரான பெங்களூருவில் கௌரி லங்கேஷ் என்ற சிந்தனையாளர் கொலை செய்யப்பட்டபோது அவர் வலதுசாரி அரசியலுக்கு எதிராக பொங்கி எழுந்தார். மதவாத சக்திகளை பகிரங்கமாக விமர்சித்தார். பாஜக, ஆர்.எஸ்.எஸ் என பெயர் சொல்லி கண்டித்தார். தன் கண்டனத்தைத் தெரிவிக்க சுயேச்சையாக தேர்தலில் கூட நின்றார்.

பிரகாஷ் ராஜ் ஆட்சிக்கு வர நினைக்கவில்லை. அவரும் எந்தக் கட்சியிலும் சேரவில்லை. கட்சியும் தொடங்கவில்லை. ஆனால் மத அடையாளவாத வன்முறை நாட்டை பாழ்படுத்தி விடும் என்று துணிந்து குரல் கொடுக்கிறார்.

எந்த ஒரு நடிகராவது அரசியலுக்கு வந்தாரென்றால் பிரகாஷ் ராஜைத்தான் கூற முடியும். உதயநிதி அரசியல் குடும்பத்திலிருந்து நடிக்கச் சென்றவர் என்பதால் அவரை கணக்கில் கொள்ளவில்லை. மற்றவர்களெல்லாம் ஆட்சிக்கு வரத்தான் நினைக்கிறார்களே தவிர, அரசியலுக்கு வர நினைப்பதில்லை. அரசியல் பேசவே அஞ்சுகிறார்கள். நேராக தேர்தல் முதல்வர் பதவி. அவ்வளவுதான் அவர்கள் ஆசை. சின்னச்சின்ன ஆசை. பாவம்.

